بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 10

இதழ் 46

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரீ கமரீ 1447 ஜமாதில் அவ்வல் 13

ஹிஜ்ரீ ஷம்ஸி 1404 நுபுவ்வத் 13 ★ 13 நவம்பர் 2024

## அல்லாஹ்வின் கட்டளை

اِنَّ اللّٰہَ لَا یَخۡفٰی عَلَیۡہِ شَیۡءٌ فِی الۡاَرۡضِ وَلَا فِی السَّمَآءِ ؕ

**பொருள்**

**பூமியிலும், வானத்திலும் அல்லாஹ்வுக்கு மறைந்ததாக எப்பொருளும் இல்லை.**

**(ஆலி இம்ரான் : 06)**

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**இறைத் தூதர் (ஸல்) அவர்களை ஏற்காதவர் காஃபிர் ஆவார்**
**ஆனால் மஹ்தி மற்றும் மஸீஹை எவர் ஒப்புக் கொள்வதில்லையோ அவரது ஈமானும் வீணாகி விடும். முடிவு ஒன்றே ஆகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

**இஸ்திஃக்ஃபார்**

ஒரு நபர் கடன் தொடர்பாக துஆவிற்காக வேண்டினார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

இஸ்திஃக்ஃபார் அதிகம் செய்து வாருங்கள்.

**அரபி தஃப்ஸீர் எழுதுவதற்கு மறைவான ஆற்றல்**

நாட்கள் குறைவாக எஞ்சியிருக்கின்றன. தற்போதோ நாம் உருது வேக வேகமாக எழுதப்படுவதைப் போன்று எழுதுகின்றோம். இன்னும் கூறப்போனால், பலமுறை எழுதுகோலோ எழுதிக் கொண்டே இருக்கின்றது: என்ன எழுதுகின்றோம் ? என்பதை நாம் அறிவதில்லை.

**அஹ்மதி அல்லாதவர்களுக்குப் பின்னால் தொழுகை**

தங்களை ஏற்றுக் கொள்ளாதவர்களின் பின்னால் நின்று தொழுவதிலிருந்து தாங்கள் ஏன் தங்களுடைய சீடர்களை தடுக்கின்றீர்கள்? என்று ஒருவர் கேட்டார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அல்லாஹ் நிறுவியுள்ள இந்த அமைப்பை எந்த மக்கள் அவசரத்தால் தப்பெண்ணம் கொண்டவாறு நிராகரித்திருக்கின்றனரோ மேலும் ஏராளமான அடையாளங்களையும் பொருட்படுத்தவில்லையோ, மேலும் இஸ்லாத்திற்கு ஏற்பட்டுள்ள துயரங்களிலிருந்து அலட்சியமாக இருக்கின்றனரோ அந்த மக்கள் இறையச்சத்தை மேற்கொள்ளவில்லை. மேலும் அல்லாஹ் தனது வேதத்தில் கூறுகின்றான்:

اِنَّمَا یَتَقَبَّلُ اللّٰہُ مِنَ الۡمُتَّقِیۡنَ

இதன் தொடர்ச்சி. 9-ம் பக்கம் ......

**அல்லாஹ் ஏராளமான பொருள்களை ஹராமாக்கியுள்ளான். அந்தப் பொருள்கள் நம்பிக்கையாளர்களுக்கு உடல் ஆரோக்கியத்திற்கோ அல்லது ஒழுக்கத்திற்கோ அல்லது ஆன்மிகத்திற்கோ தீங்கு விளைவிக்கக் கூடியவையாகும் என்ற காரணத்தாலேயே அவற்றை ஹராமாக்கியுள்ளான்**
**மேலும் எந்தப் பொருள்கள் மனிதனுடைய பௌதீக நல்லொழுக்க மற்றும் ஆத்மிக முன்னேற்றத்திற்கு காரணியாக இருக்குமோ அவற்றையே ஆகுமானவயைாக ஆக்கியுள்ளான்**

یٰۤاَیُّہَا الرُّسُلُ کُلُوۡا مِنَ الطَّیِّبٰتِ وَاعۡمَلُوۡا صَالِحًا ؕ اِنِّیۡ بِمَا تَعۡمَلُوۡنَ عَلِیۡمٌ ﴿۵۲﴾ (23:52)

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கான விளக்கவுரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

இந்த வசனத்தில் நபிமார்களிடமே உரையாடப்பட்டுள்ளது என்று இந்த வசனத்திலிருந்து ஏமாற்றமடைந்து விடக்கூடாது. ஏனெனில், இது திருக்குர்ஆனின் சட்டமாகும். அதாவது, சில இடத்தில் நபிமார்களுடன் உரையாடப்படுகின்றது. ஆனால், அவர்களை பின்பற்றும் அனைத்து நபர்களும் அதற்கு பொருள்படுவர். உதாரணமாக, திருக்குர்ஆனில், அல்லாஹ் இறைத் தூதர் (ஸல்) அவர்களை விளித்து இவ்வாறு கூறுகின்றான்: اِمَّا یَبۡلُغَنَّ عِنۡدَکَ الۡکِبَرَ اَحَدُہُمَاۤ اَوۡ کِلٰہُمَا فَلَا تَقُلۡ لَّہُمَاۤ اُفٍّ وَّلَا تَنۡہَرۡہُمَا وَقُلۡ لَّہُمَا قَوۡلًا کَرِیۡمًا ۝ (பனீ இஸ்ராயீல்: 24)

பொருள்:

உம்முடைய இறைவன் மிகவும் வலியுறுத்தி இவ்வாறு கட்டளையிட்டுள்ளான். நீங்கள் அவனையன்றி வேறெதனையும் வணங்காதீர்கள்; மேலும் (உங்கள்) பெற்றோரிடம் நல்லமுறையில் நடந்து கொள்ளுங்கள்; அவர்களுள் ஒருவர் அல்லது அவர்களிருவரும் உம்முடைய வாழ்நாளில் முதுமையை எய்திவிடுவார்களாயின், நீர் (அவர்களது விஷயத்தில் வெறுப்பைக் காட்டும் விதத்தில்)

இதன் தொடர்ச்சி. 12-ம் பக்கம் ......

## நபிமொழி

ஹஸ்ரத் தல்ஹா பின் உபைதில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

(ஸமாம் பின் ஸஃலபா (ரலி) என்ற) ஒரு நபர் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் வந்தபோது, நாங்கள் பார்த்தது என்னவென்றால், அவர் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் இஸ்லாம் தொடர்பாக கேட்டுக் கொண்டிருந்தார். இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இரவும், பகலும் ஐவேளை தொழுகைகளை தொழ வேண்டும். அப்போது அவர் கூறினார்: என் மீது இதனைத் தவிர்த்து வேறு ஏதேனும் தொழுகையும் உள்ளதா?. கூறினார்கள்: தமது விருப்பத்தின் பெயரில் தொழப்படும் அதத் தவிர வேறெதுவுமில்லை. பின்னர் இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ரமலான் மாதத்தின் நோன்புகளை நோற்பதும் கடமையாகும். அப்போது அவர் கேட்டார்: என் மீது இதனைத் தவிர ஏதேனும் நோன்புகள் உள்ளனவா?

அன்னார் (ஸல்) கூறினார்கள்: நீர் உமது விருப்பத்தின்படி நோற்கும் (நஃபில்) நோன்புகளைத் தவிர வேறெதுவுமில்லை!

அடுத்து, இறைத் தூதர் (ஸல்) அவர்கள் அவருக்கு ஸகாத்தைக் குறித்து கூறினார்கள். எனக்கு இதனை தவிர வேறு ஏதேனும் உள்ளதா? என்று அவர் கேட்டார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: நீர் உமது விருப்பத்தின்படி கொடுக்கும் சிலவற்றைத் தவிர வேறெதுவுமில்லை!

(ஹஸ்ரத் தல்ஹா (ரலி)) கூறினார்கள்: இதைக் கேட்டு அந்த நபர் திரும்பிச் சென்று விட்டார். மேலும், அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் இதை விட கூடுதலாகவும், குறைவாகவும் செயல்பட மாட்டேன் என்று கூறியவாறு அந்த நபர் சென்றார்.

இவர் (இந்தக்கூற்றில்) உண்மையாளர் என்றால் வெற்றி பெற்று விட்டார்! என்று இறைத் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் புஹாரி) * * * * * * * *

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹுனைன் போரின் சூழல்கள் மற்றும் சம்பவங்களின் பின்னணியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து ஈமானை வலுவூட்டக் கூடிய நற்குறிப்புகள்**

**மதிப்பிற்குரிய டாக்டர் லயீக் அஹ்மத் ஃபர்ரஹ் ஸாஹிப் மற்றும் மதிப்பிற்குரிய ஹமீது அஹ்மது கௌரி ஸாஹிப் போன்ற மர்ஹூம்களின் நற்குறிப்புகளும் ஜனாஸா காயிப் தொழுகையும்**

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், பனூ ஹவாஸின் கோத்திரத்தின் வேதனையான வேண்டுகோள்களைக் கேட்டார்கள். மேலும், அவர்களின் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. இன்னும் கூறப்போனால், ‘அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நான் உங்களது வருகைக்காகப் பல நாட்கள் காத்திருந்தேன்; இனி நீங்கள் வரமாட்டீர்கள் என்று எனக்கு உறுதியாகும் வரை காத்திருந்தேன்; இப்போது கைதிகளில் மிகச் சிலரே என்னிடம் உள்ளனர்; மற்றவர்கள் அனைவரும் பங்கிடப்பட்டு விட்டனர். என்னைப் பொறுத்தவரை, மிகவும் உண்மையான பேச்சே மிகவும் விரும்பத்தக்கது. எனவே, இப்போது நீங்கள் இரண்டு விஷயங்களில் ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும்; போர்க் கைதிகளாக இருக்கும் ஆண்களும், பெண்களும் அல்லது பொருட்களும் செல்வங்களும். இவற்றில் நீங்கள் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்; நான் உங்களுக்காக மிகவும் காத்திருந்தேன். இரண்டையுமே தர வேண்டும் என்று நான் விரும்பினேன்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹவாஸின் கைதிகள் அனைவரையும் எந்த ஈடும், இழப்பீடும் இன்றி விடுதலை செய்து விட்டார்கள்

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 03 அக்டோபர் 2025** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1404 ஆண்டு **அகாஃ** மாதம் **03 ம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

ஹுனைன் போருக்குப் பிறகு அதில் கிடைத்த போர்ச் செல்வங்கள் மற்றும் அதன் பங்கீடும் குறித்து கூறப்பட்டு வந்தது. இது பற்றிய மேலும் பல சம்பவங்கள் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹுனைன் வெற்றிக்குப் பிறகு அனைத்துப் போர்ச் செல்வங்களையும் ஜிஃரானா எனும் இடத்தில் ஒன்று திரட்டும்படி உத்தரவிட்டார்கள். இந்த உத்தரவைப் பிறப்பித்த பின் அன்னார் (ஸல்) தாயிஃபை நோக்கிப் பயணமானார்கள். ஏறத்தாழ ஒரு மாத காலத்திற்குப் பிறகு தாயிஃபிலிருந்து திரும்பி ஜிஃரானாவிற்கு வந்தார்கள். அங்கு வந்த பின்னரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர்ச் செல்வங்களைப் பங்கீடு செய்யாமல் சில நாட்கள் காத்திருந்தார்கள்.

சிலருடைய கருத்துப்படி, பனூ ஹவாஸின் கோத்திரத்தினர் தவ்பா செய்து திரும்பி வருவார்கள் என்றும், அவர்களின் மனைவி,மக்கள் மற்றும் கால்நடைகள் அவர்களுக்குத் திரும்ப ஒப்படைக்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிமூன்று அல்லது பதினான்கு நாட்கள் காத்திருந்தார்கள். ஒருபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களுக்காகக் காத்திருக்க, மறுபுறம் பனூ ஹவாஸினோ நாம் செல்வது பயனுள்ளதாக இருக்குமா? இல்லையா? என்ற குழப்பத்தில் இருந்தனர். இறுதியாக, இவ்வளவு காத்திருப்புக்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போர்ச் செல்வங்களையும், போர்க் கைதிகளையும் பங்கீடு செய்துவிட்டார்கள். ஏனென்றால், அவர்கள் வராததைக் கண்டபோது (பங்கிட்டு விட்டார்கள்). இந்தப் பங்கீடு முடிந்த பிறகு பனூ ஹவாஸின் கோத்திரத்தைச் சேர்ந்த பதினான்கு பிரமுகர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார்கள். அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியிருந்ததோடு, தங்கள் கோத்திரம் முழுவதுமே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதாகவும் தெரிவித்தார்கள். பின்னர், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கருணை காட்டுமாறு வேண்டியவாறு, ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் பாரம்பரிய மிக்க, மரியாதைக்குரிய மக்கள் ஆவோம்; நாங்கள் எதிர்கொள்ளும் இந்தத் துன்பமும், துயரமும் தங்களுக்குத் தெரியாதது அல்ல; தாங்கள் எங்கள் மீது கருணை காட்டுங்கள்; அல்லாஹ் தங்கள் மீது கருணை காட்டுவான்! என்றார்கள்.

அந்தத் தூதுக் குழுவின் தலைவராக அபூ ஸூரத் ஸுஹைர் பின் ஜர்வல் என்பவர் இருந்தார். இவர் ஒரு சொற்பொழிவாளராகவும், கவிஞராகவும் இருந்தார். அவர் மனதை மிகவும் கவரும் வகையிலும், உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்னிலையில் கருணையை வேண்டினார். ‘அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கைது செய்யப்பட்டவர்களில் தங்களின் அத்தைகள், தங்களின் சிற்றன்னைகள் மற்றும் தங்களின் சகோதரிகளும் இருக்கின்றனர். அவர்கள்தான் தங்களை வளர்த்தார்கள்; தங்களுக்கு உணவளித்துப் பராமரித்தார்கள்‘ என்று கூறினார்.

அவர் இவ்வாறு கூறியதற்குக் காரணம் என்னவெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஸஅத் கோத்திரத்தில் பால்குடி பருவத்தைக் கழித்தார்கள். அங்கேதான் வளர்ந்தார்கள். மேலும், அன்னாருக்கு பாலூட்டிய பெற்றோர்கள் பனூ ஸஅத் குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். அந்தக் குலம் பனூ ஹவாஸினின் ஒரு கிளையாகும். பின்னர் அவர், ‘நாங்கள் பாலூட்டிய இந்த உபகாரத்தை ஃகஸ்ஸானிய மன்னன் ஹாரிஸ் பின் அபீ ஷிம்ர் அல்லது ஈராக்கிய மன்னன் நுஃமான் பின் முன்ஸிர் ஆகியோருக்கு செய்திருந்தால், மேலும், எங்களுக்கு இத்தகைய துயரம் ஏற்பட்டிருந்தால் அவர்கள் எங்கள் மீது கருணை காட்டியிருப்பார்கள்; தாங்களோ அனைவரையும் விட மேலாக கருணை காட்டக் கூடியவராகவும், ஈகைக் குணத்தின் அதிபதியாகவும் இருக்கின்றீர்கள்‘ என்று கூறினார். இதன் பிறகு, அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து ஒரு கவிதையும் பாடினார்.

இந்தக் குழுவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செவிலித் தாய்வழி சிறிய தந்தையார் ஒருவரும் இருந்தார். அவரும் இதே போன்ற உணர்வுகளுடன் பேசினார். ‘தாங்கள் குழந்தையாக எங்களிடம் இருந்தபோதும் நான் உங்களைப் பார்த்தேன்;

தாங்கள் மிகவும் நற்குணமுள்ளவராக இருந்தீர்கள். அதன் பிறகு, தங்கள் வாலிபப் பருவத்தில் தங்களைச் சந்திக்கும் நற்பாக்கியம் எனக்குக் கிடைத்தது; வாலிபப் பருவத்திலும் தங்களை விடச் சிறந்த நல்லொழுக்கம் மற்றும் உயர்ந்த குணம் கொண்டவர் யாரும் இருக்கவில்லை. தாங்கள் நன்மையின் உருவமாகத் திகழ்கிறீர்கள்; நீங்கள் ஈகையின் ஆறாக இருக்கிறீர்கள். நாங்கள் உங்களுடையவர்கள்; உங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனவே, எங்கள் மீது கருணை காட்டுங்கள்.இந்த கருணைக்கு அல்லாஹ் தங்களுக்குப் பதிலுபகாரம் அளிப்பான் என்று கூறினார்.

ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள், அவர்களின் வேதனையான வேண்டுகோள்களைக் கேட்டார்கள். மேலும், அவர்களின் கோரிக்கையை நிராகரிக்கவில்லை. இன்னும் கூறப்போனால், ‘அன்னார் (ஸல்) கூறினார்கள்:

நான் உங்களது வருகைக்காகப் பல நாட்கள் காத்திருந்தேன்; இனி நீங்கள் வரமாட்டீர்கள் என்று எனக்கு உறுதியாகும் வரை காத்திருந்தேன்; இப்போது கைதிகளில் மிகச் சிலரே என்னிடம் உள்ளனர்; மற்றவர்கள் அனைவரும் பங்கிடப்பட்டு விட்டனர். என்னைப் பொறுத்தவரை, மிகவும் உண்மையான பேச்சே மிகவும் விரும்பத்தக்கது. எனவே, இப்போது நீங்கள் இரண்டு விஷயங்களில் ஒன்றை மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும்; போர்க் கைதிகளாக இருக்கும் ஆண்களும், பெண்களும் அல்லது பொருட்களும் செல்வங்களும். இவற்றில் நீங்கள் எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம்; நான் உங்களுக்காக மிகவும் காத்திருந்தேன். இரண்டையுமே தர வேண்டும் என்று நான் விரும்பினேன்.

பனூ ஹவாஸின் குலத்தின் குழுவினர் இந்தச் சூழ்நிலைகள் அனைத்தையும் பார்த்தபோது, ‘ நாங்கள் எங்கள் கைதிகளை, அதாவது எங்கள் ஆண்களையும், பெண்களையும் திரும்பப் பெற விரும்புகிறோம்‘ என்று விண்ணப்பித்தனர். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்,‘ எனக்கும் பனூ அப்துல் முத்தலிபிற்கும் கிடைத்த கைதிகள் உங்களுடையவர்களே!; அதாவது, நான் அவர்களை விடுதலை செய்து உங்களுக்குத் திரும்பக் கொடுத்துவிடுகிறேன். மற்றக் கைதிகளைப் பற்றி நான் மற்ற முஸ்லிம்களிடம் பேசுவேன். ஏனென்றால், நான் அவர்களை அவர்களுக்குக் கொடுத்துவிட்டேன் என்றார்கள். அத்துடன், தூதுக் குழுவினர் என்ன செய்ய வேண்டும்? என்ற ஒரு தீர்வையும் அன்னார் (ஸல்) கூறினார்கள்.

‘நீங்கள் லுஹர் தொழுகைக்குப் பிறகு மக்கள் மத்தியில் எழுந்து நின்று, நாங்கள் முஸ்லிம்களுக்காக ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களை எங்கள் பரிந்துரையாளராக ஆக்குகிறோம்; மேலும், எங்கள் பிள்ளைகளையும், எங்கள் பெண்களையும் விட்டுவிடுவதற்கு முஸ்லிம்கள் மூலமாக ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களிடம் பரிந்துரை செய்யுமாறு கோருகிறோம் என்று கூறுங்கள்! என்றார்கள். அத்துடன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ‘முஸ்லிம்களின் முன்னிலையில் நீங்கள் இஸ்லாத்தைத் தழுவியதை வெளிப்படுத்துங்கள்; மேலும், 'நாங்கள் உங்கள் சகோதரர்கள்' என்றும் கூறுங்கள்; அதன் பிறகு, "நான் மக்களிடம் உங்களுக்காகப் பரிந்து பேசுவேன்" என்று கூறினார்கள்.

அதாவது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நான் பரிந்துரை செய்வேன்' என்று கூறினார்கள்.

கைதிகளை விடுவிப்பதற்கான வழியைத் தாமே கற்றுக்கொடுப்பது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெருந்தன்மை மற்றும் வள்ளல் தன்மையின் அழகான ஓர் எடுத்துக்காட்டாகும்; ஏனெனில், கைதிகள் இப்போது சாதாரண முஸ்லிம்களின் உடைமையாகிவிட்டனர். எனவே, இதன் மூலம் சாதாரண முஸ்லிம்களின் சுயமரியாதையும் பாதுகாக்கப்பட்டது;பனூ ஹவாஸினின் மரியாதையும் காக்கப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியது போன்றே லுஹர் தொழுகைக்குப் பிறகு, தூதுக் குழுவினர் எழுந்து நின்று விண்ணப்பித்தனர்.

புகாரியின் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று மக்களிடம் உரையாற்றியவாறு கூறினார்கள்:

‘உங்கள் சகோதரர்கள் தவ்பா செய்தவாறு உங்களிடம் வந்துள்ளனர்; நான் அவர்களின் கைதிகளை அவர்களிடம் திரும்பக் கொடுக்க விரும்புகிறேன்; எவரேனும் மனமுவந்து அவ்வாறு செய்ய விரும்பினால், செய்யலாம்; அதற்குப் பதிலாக எம்மிடம் ஏதேனும் பெற விரும்புபவரும் அவ்வாறு செய்யலாம்; நான் முதலில், கிடைத்த போர்ச் செல்வங்களிலிருந்து அவருக்குரிய பங்கினைத் திரும்பக் கொடுத்து விடுவேன்.

மேலும் அத்துடன் தமக்கும், தம் குடும்பத்தினரான பனூ அப்துல் முத்தலிபிற்கும் உரிய கைதிகளைத் திருப்பித் கொடுப்பதாக அறிவித்தார்கள்.

ஸஹாபா பெருமக்கள் தங்கள் உயிர்கள், தங்கள் மனைவி மக்கள் மற்றும் தங்கள் தாய், தந்தையரையும் விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அதிகமாக நேசித்தவர்கள் ஆவார்கள். “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களின் மகிழ்ச்சிக்காக நாங்கள் மனமுவந்து எங்கள் ஹவாஸின் கைதிகளைத் திரும்பக் கொடுக்கிறோம்" என்று அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களின் இந்த உணர்வைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இருப்பினும், அனைவரின் சம்மதத்தையும், மனப்பூர்வமான விருப்பத்தையும் அறிவது பொருத்தமானது என்று அன்னார் (ஸல்) கருதினார்கள். எனவே, ‘பொதுவான கூட்டத்தில் அனைவரும் பேசிக் கொண்டிருப்பதால், உங்களில் யார் அனுமதி கொடுத்தார்கள்? யார் கொடுக்கவில்லை? என்று எனக்குத் தெரியவில்லை. அதனால், நீங்கள் திரும்பிச் செல்லுங்கள்; உங்கள் தலைவர்களும், பொறுப்பாளர்களும் என்னிடம் வந்து தம் மக்களின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கட்டும்! என்று கூறினார்கள். அன்னாருடைய இந்த அறிவுரைக்குப்பிறகு, அனைத்து மக்களும் மகிழ்ச்சியுடன் தங்கள் கைதிகளைத் திரும்பக் கொடுப்பதாகத் தெரிவித்தார்கள். மேலும், அவர்களின் பொறுப்பாளர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் (இதை) தெரிவித்தார்கள்.

இவ்வாறாக, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த மாபெரும் உபகாரம் அந்த எதிரிக் குலத்தின் மீது நிகழ்ந்தது. எந்த ஈடும், இழப்பீடும் இன்றி அனைத்துக் கைதிகளும் திரும்பக் கொடுக்கப்பட்டார்கள். மேலும், தமது உண்மையான, நன்றி உணர்வுள்ள, அன்பான ஸஹாபிகளின் உணர்வுகளையும் எவ்வாறு கருத்தில் கொண்டார்கள் என்றால், ‘ஒவ்வொரு கைதிக்கும் பகரமாக ஆறு ஒட்டகங்கள் வழங்கப்படும்‘ என்றும் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்கள் மீதான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அன்பும், கீழ்ப்படிதலும் எப்படி இருந்தது? என்றால், கைதிகள் இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட நேரத்தில் அவர் அங்கே இருக்கவில்லை. அன்னார் (ரலி) திரும்பி வந்தபோது, அடிமைகள் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதைக் கண்டார்கள். கைதிகள் மகிழ்ச்சியில் துள்ளிக் கொண்டிருந்தனர். விசாரித்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்துக் கைதிகளையும் விடுதலை செய்து விட்டார்கள் என்று அன்னாருக்குத் தெரிய வந்தது.

அதைக் கேட்ட அன்னார் (ரலி), எந்த விதமான ஆய்வோ, ஆராய்ச்சியோ செய்யத் தேவையில்லை என்று கருதி உடனே தன் மகனை அழைத்து, ‘அப்துல்லாஹ்வே! நீ சென்று, ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எனக்கு அளித்த அந்த அடிமைப் பெண்ணை விடுதலை செய்! என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹவாஸின் கோத்திரத்தின் இந்தக் கைதிகளை எந்தவித ஈடும், இழப்பீடும் இன்றி விடுதலை செய்ததோடு மட்டுமல்லாமல், அவர்களுக்குப் புதிய ஆடைகளையும் வழங்கினார்கள்.



ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கட்டளையாக அதாவது இவர்களில் விடுதலை அடைந்த எவரும் புதிய ஆடை இல்லாமல் செல்லக் கூடாது என்று கூறினார்கள். எனவே, இந்தக் கட்டளையை நிறைவேற்றுவதற்காக புதிய ஆடைகளை வாங்குவதற்காக பஸ்ர் பின் ஸுஃப்யான் எனும் நபித்தோழர் அனுப்பப்பட்டார். அவர் புதிய போர்வைகளை வாங்கிக் கொண்டு வந்தார்கள்; மேலும் ஒவ்வொரு கைதிக்கும் புதிய ஆடையையும் கொடுக்கப்பட்டது.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் அதீக், ஹதீஸ் எண்: 2540 - 2539.)

ஓர் அறிவிப்பின்படி, மூன்று நபர்கள் தங்கள் கைதிகளைத் திரும்பக் கொடுக்க மறுத்துவிட்டனர். அக்ரஃ பின் ஹாபிஸ் என்பவர், 'என்னையும், பனூ தமீம் குலத்தையும் பொறுத்தவரை, நாங்கள் மறுக்கிறோம்' என்று கூறினார். உயைனா பின் ஹிஸ்ன் ஃபஸாரீ என்பவர், 'நானும் பனூ ஃபஸாரா கோத்திரமும் மறுக்கிறோம்' என்று கூறினார். அப்பாஸ் பின் மிர்தாஸ் கூறினார்: நானும், பனூ ஸுலைமும் கைதிகளைத் திரும்பக் கொடுக்க மாட்டோம்.'

ஆனால், பனூ ஸுலைம் குலத்தினர் இதைக் கேட்டதுமே, தங்கள் தலைவரின் பேச்சை ஒப்புக் கொள்ள மறுத்துவிட்டனர். 'எங்களிடம் இருப்பது அனைத்தையும் நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் கொடுத்துவிட்டோம்' என்று அவர்கள் கூறினார்கள்.

மற்ற சில அறிவிப்புகளின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'பனூ ஹவாஸினின் அனைத்துக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டவர்கள் ஆவார்கள்.யார் தன் கைதியை விடுதலை செய்ய விரும்பவில்லையோ, அவருக்கு அதற்குப் பதிலாக பைத்துல் மாலிலிருந்து ஆறு இளம் ஒட்டகங்கள் மாற்று ஈடாக வழங்கப்படும்' என்று கூறினார்கள். எனவே, தங்கள் கைதிகளைக் கொடுக்கத் தயாராக இல்லாத அனைத்து மக்களும் இதற்கு சம்மதித்துவிட்டனர். இவ்வாறாக, பனூ ஹவாஸினின் ஆறாயிரம் கைதிகள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

சில அறிவிப்புகளின்படி, உயைனா பின் ஹிஸ்ன் ஃபஸாரீ என்பவர் தன் கைதியை இன்னமும் கூடத் திரும்பக் கொடுக்கவில்லை. ஆனால், இந்த கீழ்ப்படியாமையின காரணமாக, அவர் கடும் அவமானத்தைச் சுமக்க நேர்ந்தது. மேலும், அவர் நன்மையிலிருந்தும், பரக்கத்திலிருந்தும் இழப்பிற்குரியவராக இருந்தார். அனைவரும் தங்கள் கைதிகளைத் திரும்பக் கொடுத்துவிட்டார்கள்.ஆனால், உயைனா மட்டும் திரும்பக் கொடுக்கவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தெரிவிக்கப்பட்டபோது, 'அல்லாஹ் அவனுக்கு நஷ்டத்தை அளிக்கட்டும்! என்று அன்னார் (ஸல்) கூறினார்கள் என்று எழுதப்பட்டுள்ளது.

அவருடைய கைதி பற்றிய சம்பவம் என்னவெனில், அவர் இளம் பெண்ணுக்குப் பதிலாக ஒரு வயதான பெண்ணைக் கைதியாக எடுத்திருந்தார். மக்கள் கேட்டபோது, 'அவளை மீட்க, அதாவது இந்த வயதான பெண்ணுக்காக அவளது குடும்பத்தினர் வரும்போது, அவளது அதிகமான சந்ததிகளின் காரணமாக நான் கேட்ட பணம் எனக்கு கிடக்கும்' என்று அவர் கூறினார். இப்போது அனைத்துக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள். ஆனால், அவர் விடுதலை செய்ய மறுத்துவிட்டார். அப்போது, அந்த வயதான பெண்ணின் மகன் உயைனாவிடம் வந்து, 'நூறு ஒட்டகங்களுக்குப் பகரமாக எங்கள் தாயை விடுதலை செய்யுங்கள்! என்று அவரிடம் கூறினார்.

'இப்போது இவன் விலையை இன்னும் உயர்த்துவான்' என்று உயைனா நினைத்தார். எனவே, அவர் விடுதலை செய்யமறுத்துவிட்டார். இதனால், அவரது மகன் திரும்பிச் சென்றுவிட்டார். சிறிது நேரத்திற்குப் பிறகு, அவன் திரும்பி வரமாட்டான் என்று உயைனாவுக்குத் தோன்றியபோது, அந்த மகனிடம் சென்று, 'நீ கொடுக்க விரும்பிய ஒட்டகங்களை இப்போது கொடுக்கிறாயா?" என்று உயைனாவே கேட்டார். அதற்கு அந்த இளைஞன், 'இப்போது நான்கு,ஐந்து ஒட்டகங்கள் மட்டுமே கொடுப்பேன்' என்று கூறினார். இவ்வாறாக, பேரம் குறைந்து பத்து ஒட்டகங்கள் வரை வந்து நின்றது.

உயைனா இன்னும் கேட்பார். 'நான் இதையும் கொடுக்க மாட்டேன்' என்று இவர், கூறுவார். 'சரி, இவ்வளவு கொடுத்துவிடு' என்று உயைனா கூறுவார். இறுதியில், எண்ணிக்கை குறைந்து கொண்டே சென்றது. கடைசியாக, நிலைமை எங்கே வந்தது என்றால், 'இந்தக் கிழவியை என்னிடமிருந்து இலவசமாகவே எடுத்துச் சென்று விடுங்கள்' என்று சொல்லும் நிலைக்கு உயைனா வந்தார். அதற்கு அந்த இளைஞன், 'ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அனைத்துக் கைதிகளையும் விடுதலை செய்ததோடு, ஆடைகளையும் வழங்கினார்கள். இந்தக் கிழவிக்கு அது இல்லாமல் போய்விட்டது. அதனால், நீ அவளுக்கு ஆடையையும் கொடு' என்று கூறினார். 'என்னிடம் ஏதுமில்லை.நான் ஏற்கெனவே மிகவும் ஏழையாக இருக்கிறேன். பேராசை காரணமாக நான் சொன்னேன். அதிலும் நான் தோல்வி அடைந்துவிட்டேன்' என்று உயைனா கூறினார். ஆனால், அந்த இளைஞன், 'ஏதேனும் கொடுத்தே தீர வேண்டும்' என்று பிடிவாதமாக இருந்தார்.இறுதியில், உயைனா தன் போர்வையைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறாக, அந்த இளைஞன் அந்தக் கைதிப் பெண்ணை அழைத்துச் சென்றதோடு, ஆடையையும் எடுத்துச் சென்றார். மேலும், அவர் போகும்போது அந்த உயைனாவை நோக்கி, 'உனது மூளையானது அறிவும், விவேகமற்றதாக உள்ளது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் திறமை உன்னிடம் சுத்தமாகக் கிடையாது என்று கூறிச் சென்றார். 'மேலும், அவருடைய மற்ற நண்பர்களும் இதனைக் கூறி அவரை இகழ்ந்தார்கள்.

MUNEEF
TRADING COMPANY
IRON & STEEL
MERCHANT
Y. Jafarullah
+91 97104 19554
+91 79047 15716
89/11, Shanmugapuram
5th (6th Corner) Street
Thiruvotriyur, Chennai 19
muneefsteeltc@gmail.com
GSTN: 33ALSPJ9110D1Z9

(ஸுபுலுல் ஹுதா, தொகுதி 5, பக்கம் 393-394, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத்) (தாயிரா மஃரூஃப், ஸீரத் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், தொகுதி 4, பக்கம் 314 - 315)

இறுதியில், பேராசையின் காரணமாக அவருக்கு எதுவுமே கிடைக்கவில்லை.

பனூ ஹவாஸின் குலத் தலைவர் மாலிக் பின் அவ்ஃப் இஸ்லாத்தைத் தழுவியது பற்றி இவ்வாறு எழுதப்பட்டுள்ளது;

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ ஹவாஸின் குழுவினரிடம், அவர்களின் தலைவர் மாலிக் பின் அவ்ஃப் பற்றி, 'அவர் எங்கே இருக்கிறார்?' என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள், 'அவர் தாயிஃபில் பனூ ஸகீஃப் குலத்தாருடன் இருக்கிறார்' என்று பதிலளித்தார்கள்.'அவர் கீழ்ப்படிதலை ஏற்றுக் கொண்டு என்னிடம் வந்துவிட்டால், கைதிகளாகப் பிடிக்கப்பட்ட அவரது மனைவி மக்களும் அவரிடம் திரும்பக் கொடுக்கப்படுவார்கள் என்று அவருக்குத் தகவல் கொடுங்கள்' என்று அன்னார் (ஸல்) கூறினார்கள்.

சில அறிவிப்புகளின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருடைய மனைவி. மக்களை அடிமைகளாக யாருக்கும் கொடுக்க வேண்டாம்! என்று ஒரு சிறப்புக் கட்டளை பிறப்பித்தார்கள். அவர்களுக்கு மக்காவிலுள்ள உம்மு அப்துல்லாஹ் பின்த் அபீ உமைய்யா அவர்களின் வீட்டில் தங்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. அவர்கள் உடனே அவருக்குத் தகவல் கொடுத்தார்கள். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருவதற்கு உடனடியாகத் தயாரானார். ஆனால், பனூ ஸகீஃப் குலத்தாரிடம் மாட்டிக் கொள்வோமோ? என்று பயந்தார். ஏனென்றால், "அவர் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் போகிறார்'' என்று அவர்களுக்குத் தெரிந்தால், அவர்கள் அவரைக் கைது செய்து விடுவார்களோ என்று அஞ்சினார். எனவே, அவர் ஒரு குதிரையையும், ஒட்டகத்தையும் தயார் செய்து இரவின் இருளில் தாயிஃபை விட்டு வெளியேறி ஜிஃரானாவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவருடைய மனைவி,

மக்களையும் அவரிடம் திரும்பக் கொடுத்தார்கள். மேலும், நூறு ஒட்டகங்களையும் அன்பளிப்பாக வழங்கினார்கள். அன்னாருடைய மன்னிப்பு மற்றும் கொடையைக் கண்டு அவர் முஸ்லிம் ஆகிவிட்டார். அதன் பிறகு, அவர் தன் வாழ்நாள் முழுவதும் ஒரு தூய முஸ்லிமாகவே இருந்தார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பின்னர் அவரையே ஹவாஸின் குலத்தின் முஸ்லிம்களுக்கு ஆளுநராகவும், அவர்களின் படைத் தளபதியாகவும் ஆக்கினார்கள்.

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹஷ்ஷாம், பக்கம் 797, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 2001)

இந்த மாலிக் பின் அவ்ஃப்தான், அனைத்து பனூ ஹவாஸின், ஸகீஃப் மற்றும் ஏனைய கோத்திரங்களை ஒன்று திரட்டி முஸ்லிம்களை முற்றிலுமாக அழித்துவிடுவேன் என்று அழைத்து வந்தவர் ஆவார். அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இரத்தத்தைக் குடிப்பதற்கு ஆசைப்பட்டவர் ஆவார். ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன்மாதிரியும், மன்னிப்பும், பெருந்தன்மையும் எத்தகையது என்றால், அன்னார் (ஸல்) அவரது நேர்வழிக்கு ஆசைப்பட்டார்கள். அவர் நேர்வழியைத் தேடுபவராக வந்தபோது, அனைத்தையும் மன்னித்துவிட்டது மட்டுமல்லாமல், அக்காலத்தின் மதிப்புமிக்க செல்வமான நூறு ஒட்டகங்களையும் அன்பளிப்பாக வழங்கினார்கள்.

இந்தப் போரின் கைதிகளில் ஷைமா எனும் ஒரு பெண்மணியும் இருந்தார். இது அவரது புனைப்பெயர். அவரது உண்மையான பெயர் ஹுஸாஃபா ஆகும். அவர் கைது செய்யப்பட்டபோது, கைது செய்தவர்களிடம், 'நான் உங்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் செவிலித்தாய் வகையில் சகோதரி' என்று கூறினார். ஆனால், ஸஹாபிகள் அதை ஒப்புக் கொள்ளவில்லை. அன்ஸாரிகளின் ஒரு குழுவினர் அவரைக் பிடித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

'முஹம்மத் (ஸல்) அவர்களே! உங்கள் செவிலித்தாய் வகையில் நான் சகோதரி' என்று அவர் கூறினார்.ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'ஏதேனும் அடையாளம் இருக்கிறதா?' என்று கேட்டார்கள். அதற்கு அவர், பற்களின் அடையாளத்தைக் காட்டினார்.'தாங்கள் என்னைக் கடித்தீர்கள்; அதாவது சிறுவயதில் நான் உங்களை என் மடியில் வைத்திருந்தபோது கடித்துவிட்டீர்கள்' என்று கூறினார்.

இந்தச் சம்பவம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் பின்னர் நினைவுக்கு வந்திருக்கலாம்.'நாங்கள் அப்போது ஆடு மேய்த்துக் கொண்டிருந்தோம். உங்கள் செவிலித் தந்தை என் உண்மையான தந்தை ஆவார்; உங்கள் செவிலித் தாய் என் உண்மையான தாய் ஆவார்; அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! நான் உங்களுக்காக ஆட்டின் பாலைக் கறந்ததை நினைவுகூருங்கள்' என்று அவர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த அடையாளத்தின் மூலம் அவரை அடையாளம் கண்டு கொண்டார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்று அவருக்காகத் தம் போர்வையைக் கீழே விரித்தார்கள்; 'இதில் உட்காருங்கள்' என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரை வரவேற்றார்கள். மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. மேலும், பாலூட்டிய அந்தப் பெற்றோர்கள் குறித்துக் கேட்டார்கள். அதற்கு, 'அவர்கள் இறந்துவிட்டார்கள்' என்று அவர் கூறினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நீங்கள் நல்லது என்று கருதினால், எங்களிடமே தங்கி விடுங்கள்; உங்களுக்கு மரியாதையும், கண்ணியமும், அன்பும் கிடைக்கும். நீங்கள் உங்கள் குலத்தாரிடம் திரும்பிச் செல்ல விரும்பினால், நான் உங்களுடன் உறவைப் பேணி உதவுகிறேன். நீங்கள் அங்கேயே சென்று விடலாம்' என்று கூறினார்கள். அதற்கு அவர், 'நான் என் குலத்தாரிடம் திரும்பிச் செல்ல விரும்புகிறேன்' என்று கூறினார்.

எப்படி இருந்தாலும், அவர் இஸ்லாத்தைத் தழுவினார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு மூன்று அடிமைகளையும், ஓர் அடிமைப் பெண்ணையும் வழங்கினார்கள். அவருக்கு ஒன்று அல்லது இரண்டு ஒட்டகங்கள் கொடுக்கவும் உத்தரவிட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது ஹுனைனில் இருந்தார்கள். எனவே, அவர்கள் அவரிடம், 'நீங்கள் ஜிஃரானாவிற்குச் சென்று உங்கள் குலத்தாரிடம் தங்கியிருங்கள். நான் தாயிஃபிற்குப் போகிறேன்' என்று கூறினார்கள். அதன்படி, அவர் ஜிஃரானாவிற்கு வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஃரானாவில் அவரைச் சந்தித்தார்கள். மேலும், அவருக்கு ஆடுகளையும், செம்மறியாடுகளையும் வழங்கினார்கள்.

ஓர் அறிவிப்பின்படி, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், 'என்ன கேட்கிறாயோ? அது உமக்கு வழங்கப்படும்; நீ செய்யும் பரிந்துரை ஏற்றுக் கொள்ளப்படும்' என்று கூறினார்கள். அப்போது, அவர் தன் குலத்தைச் சேர்ந்த, பஜாத் என்ற பெயருடைய ஒருவருக்காகப் பரிந்துரை செய்தார். அந்த நபர் ஒரு முஸ்லிமைக் கொலை செய்து அவரை எரித்துவிட்டு ஓடிவிட்டார். ஆனால், ஸஹாபிகள் அவரைக் கைது செய்துவிட்டார்கள். இப்போது ஷைமா அவருக்கு மன்னிப்பு வழங்கப் பரிந்துரை செய்தபோது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நபரை மன்னித்துவிட்டார்கள்.

(பாஷைமல் அவர்களின் நூல் ஹுனைன் போர், பக்கம் 389 - 390, நஃபீஸ் அகாடமி)

அதற்கான விவரங்கள் இல்லை. ஆனால், நிச்சயமாக, அன்னார் (ஸல்) அதற்கான ஈட்டுத் தொகை போன்றவற்றையும் பின்னர் செலுத்தியிருப்பார்கள்.

அபூ தாவூதின் அறிவிப்பின்படி, ஜிஃரானா எனும் இடத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செவிலித் தாயும் அவர்களைச் சந்தித்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்த அறிவிப்பின் தொடர் பலவீனமானது என்று சொல்லப்படுகிறது. தாயார் சந்திக்கவில்லை; செவிலித் தாயின் சந்திப்பு வேறு சந்தர்ப்பத்தைப் பற்றியதாக இருக்கலாம் அல்லது அறிவிப்பாளருக்கு தவறு ஏற்பட்டிருக்கலாம். ஏனென்றால், பொதுவான அறிவிப்பின்படி, ஹுனைன் போருக்கு முன்பே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செவிலித் தாயார் இறந்துவிட்டார்கள்.

(பாஷைமல் அவர்களின் நூல் ஹுனைன் போர், பக்கம் 289, நஃபீஸ் அகாடமி)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்தபோது, ஹஸ்ரத் 'நபி (ஸல்) அவர்களை உயிருடனோ அல்லது பிணமாகவோ பிடித்துக் கொண்டு வருபவருக்கு நூறு ஒட்டகங்கள் பரிசாக வழங்கப்படும்' என்று மக்காவாசிகள் அறிவித்திருந்தார்கள். இந்தச் சம்பவம் மிகவும் பிரபலமானது. பலமுறை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இதைக் கேட்ட ஸுராகா பின் மாலிக் என்பவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின் தொடர்ந்து சென்று அன்னாரை சென்றடைந்தார். ஆனால், அந்நேரத்தில் அதிசயமான முறையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அல்லாஹ் காப்பாற்றினான்; ஸுராகாவை இயலாமையடையச் செய்தான். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம், 'ஸுராகாவே! (பாரசீக மன்னன்) கிஸ்ராவின் தங்கக் காப்புகள் உன் கைகளில் இருக்கும்போது உனது நிலைமை எப்படி இருக்கும்?' என்று கேட்டார்கள்.அந்நேரத்தில் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் பாதுகாப்புக்கான ஒரு கடிதத்தையும் எழுதிக் கொடுக்குமாறு விண்ணப்பித்திருந்தார். அதே ஸுராகா அந்தப் பாதுகாப்புப் பத்திரத்தை எடுத்துக் கொண்டு ஜிஃரானாவிற்கு வந்து இஸ்லாத்தைத் தழுவினார்.

(தாயிரா மஃரூஃப் ஸீரத் முஹம்மது ரஸூல் (ஸல்) அவர்கள், தொகுதி 9, பக்கம் 306 - 307)

இந்தச் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஏற்றிருந்த நேர்ச்சையைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. ஹஸ்ரத்

உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி, 'அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! அறியாமை காலத்தில் நான் மஸ்ஜிதுல் ஹரமில் ஒரு நாள் இஃதிகாஃப் செய்வதாக நேர்ந்திருந்தேன். தங்கள் வழிகாட்டல் என்ன?' என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நீங்கள் சென்று நேர்ச்சையைப் பூர்த்தி செய்யுங்கள்' என்று கூறினார்கள். அதன்படி, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சென்று தமது நேர்ச்சையைப் பூர்த்தி செய்தார்கள்.

(ஸஹீஹ் புஹாரீ, கிதாபுல் இஃதிகாஃப், ஹதீஸ் எண்: 2042)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜிஃரானாவில் இருந்தபோது, ஒரு நாள் இரவு உம்ரா செய்வதற்காக அங்கிருந்து மக்காவிற்குச் சென்றார்கள். அறிவிப்புகளின்படி, இரவில் சென்று அதே இரவே திரும்பி வந்துவிட்டார்கள். அன்னார் (ஸல்) எங்கும் செல்லவில்லை என்று மக்கள் நினைக்கும் அளவுக்கு மிகக் குறைந்த நேரத்திலேயே திரும்பி வந்துவிட்டார்கள்.

(இமாம் ஹல்பி அவர்களின் உருது மொழியாக்க நூல், கஸ்வாத்துன் நபி (ஸல்) அவர்கள், பக்கம் 683, தாருல் இஷாஅத், 2001-ம் ஆண்டு பதிப்பு)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவிற்குத் திரும்பியது குறித்து எழுதப்பட்டுள்ளதாவது:

துல்கஅதா மாதத்தில் பன்னிரண்டு நாட்கள் இருந்த நிலையில், ஒரு வியாழக்கிழமை அன்று அன்னார் (ஸல்) மதீனா திரும்புவதற்கான பயணத்தைத் தொடங்கினார்கள். அதற்கு முன், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அத்தாப் பின் உஸைத் (ரலி) அவர்களை மக்காவின் ஆளுநராக நியமித்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருடன் ஹஸ்ரத் முஆஸ் பின் ஜபல் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூ மூஸா அஷ்அரீ (ரலி) ஆகியோரை மக்களுக்கு திருக்குர்ஆனையும், மார்க்கத்தையும் கற்றுக் கொடுப்பதற்காக அங்கேயே விட்டுச் சென்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சில பிராணிகளைத் தங்களுடன் வைத்துக் கொண்டார்கள். வழியில் சந்திப்பவர்களுக்கு வழங்குவதற்காகவே இவ்வாறு செய்தார்கள். அன்னார் ஜிஃரானா பள்ளத்தாக்கிலிருந்து புறப்பட்டு, ஸரஃப் என்ற இடத்தைக் கடந்து, பின்னர் மர்ருஸ் ஸஹ்ரான் சென்றடைந்தார்கள். பின்னர், ஒன்பது நாட்கள் பயணத்திற்குப் பிறகு மதீனா வந்து சேர்ந்தார்கள். அப்போது துல்கஅதா மாதத்தின் மூன்று இரவுகள் மீதமிருந்தன. இந்த அனைத்துப் போர் நடவடிக்கைகளும், அதாவது மக்கா வெற்றியும், ஹவாஸின் வெற்றியும், தாயிஃப் மக்கள் மீதான தாக்குதல்களும் இரண்டு மாதங்கள் மற்றும் பதினாறு நாட்கள் நீடித்தன.

(ஸுபுலுல் ஹுதா வர் ரஷ்ஷாத் ஃபீ ஸீரத்துல் கய்ருல் இபாத், தொகுதி 5, பக்கம் 406- 407, தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1993-ம் ஆண்டு பதிப்பு)

மேற்கத்திய ஆய்வாளர்கள் மக்கா வெற்றி, ஹுனைன் போர், தாயிஃப் போர் போன்றவற்றுக்கு எதிராகக் குற்றச்சாட்டுகளை வைக்கின்றனர். மேற்கத்திய ஆய்வாளர்களுக்கு ஆட்சேபனை செய்வதற்கு உண்மையான விஷயம் எதுவும் கிடைக்கவில்லை என்றாலும், அவர்களின் ஒரு சில ஆட்சேபனைகளை நான் இங்கே விவரிக்கிறேன். அந்த வகையில், சம காலத்து மேற்கத்திய ஆய்வாளரான வில்லியம் மாண்ட்கோமெரி வாட் என்பவர் கூறுகிறார் - அதன் மொழிபெயர்ப்பு என்னவென்றால், பெரும் ஸஹாபிகளுக்கு வழங்கப்பட்ட ஒரு சில பெண்களைத் தவிர்த்து, அபகரிக்கப்பட்ட மற்ற போர்ச் செல்வங்களும்,கைதிகளும் மஸ்வூத் பின் அம்ர் ஃகஃப்பாரி (ரலி) அவர்களின் மேற்பார்வையில் ஜிஃரானாவில் வைக்கப்பட்டனர்.

(Muhammad at Madina by W. Montgomery Watt Page 73. chapter The Battle of Hunay, The Consolidation of Victory Oxford University Press Karachi,2006)

அதேபோல், ஸர் வில்லியம் முயரும் எழுதுகிறார்:

கைதிகளில் மூன்று அழகான பெண்கள் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களிடம் கொண்டு வரப்பட்டார்கள். அவர்களில் ஒருவரை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களுக்கும், ஒருவரை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கும், ஒருவரை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கும் வழங்கினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தம் பங்கில் வந்த பெண்ணைத் தம் மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள். மீதமுள்ள இருவருக்கும் என்ன நடந்தது? என்று தெரியவில்லை.

எப்படியிருப்பினும், அவர் எழுதுகிறார்: ' இவற்றிலிருந்து முஹம்மத் (ஸல்) அவர்களின் வரலாற்றைப் பற்றிய உள்அறிவு கிடைக்கிறது. அதாவது, ஒருவரின் மகள் நபியவர்களின் மனைவி ஆவார். மற்ற இருவரும் நபியவர்களின் மகள்களின் கணவர்கள் ஆவார்கள்.

( The Life of Mahomet by sir William munir Page435. chapter The Hawzinite Prisoners Released, Mahomet Presents Female Slaves to Ali, Othman and Omar London smith, Elder, &co. 15. Waterloo, Place 1878)

அவர்களுக்கு இவ்வாறான அடிமைப் பெண்களை முதலில் கொடுக்கிறார்கள். அதாவது, சுயநலத்துடன் உறவு பாராட்டி இருக்கிறார்கள்' என்று அவர் கூறுகிறார்.

அடுத்து, அவர் ஆட்சேபனையுடன் அல்லது விஷமத்துடன் ஒரு சம்பவத்தை முன்வைக்கும் முயற்சி செய்துள்ளார். ஆனால், இதில் எந்த உண்மையும் இல்லை. ஏனென்றால், ஹுனைன் போரின்போது இந்த மாதிரி அடிமைப் பெண்களை வழங்கும் வகையிலான கைதிகளின் பங்கீடு பற்றி ஸீரத் ஹலபிய்யா, தபகாத், இப்னு ஸஅத் போன்றவற்றில் காணப்படவில்லை. ஆனால், செல்வப் பங்கீடு பற்றிய குறிப்பு மட்டுமே காணப்படுகிறது.

தபகாத் இப்னு ஸஅத்-ல் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது: '

அந்நாளில் முஸ்லிம்களுக்கு ஆறாயிரம் கைதிகள் கிடைத்தார்கள். இணைவைப்பாளர்கள் முஸ்லிம்களாகி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, நபியே (ஸல்)! மக்களில் சிறந்தவராகிய தாங்கள் எங்கள் செல்வங்களையும், பெண்களையும், பிள்ளைகளையும் கைது செய்துவிட்டீர்கள் என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை நோக்கி, ''உங்களில் யாரிடம் இந்தச் சிறைபிடித்தவர்கள் இருந்தாலும், மனப்பூர்வமாகத் திரும்பக் கொடுக்க விரும்பினால் அதுவே சிறந்த வழி. அவ்வாறு விரும்பாதவர்கள் (ஈட்டுத் தொகையை) எம்மிடம் கேட்கலாம். அது நம் மீது கடனாக இருக்கும். நாம் ஏதேனும் பெற்றால், அந்தக்கடனைத் திருப்பிச் செலுத்திவிடுவோம்! என்று கூறினார்கள்.

அதற்கு, 'இறைத் தூதர் (ஸல்) அவர்களே! நாங்கள் சம்மதிக்கிறோம்; ஏற்றுக் கொள்கிறோம்' என்று அவர்கள் கூறினார்கள். 'உங்களில் ஒருவேளை யாரும் சம்மதிக்காதவர் இருக்கிறாரா? என்று எனக்குத் தெரியவில்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

முன்பும் இது எடுத்துரைக்கப்பட்டுவிட்டது.

எனவே, உங்கள் பிரதிநிதிகளை என்னிடம் அனுப்புங்கள். அவர்கள் வந்து இதனை முன்வைக்கட்டும்' என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முன் பிரதிநிதிகள் வந்து, அவர்கள் சம்மதித்து ஏற்றுக் கொள்வதாகத் தெரிவித்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னி ஸஅத், பாகம் 2, பக்கம் 118, கஸ்வா ரஸூலுல்லாஹ் (ஸல்) இலா ஹுனைன், தாருல் குதுபில் இல்மியா, பெய்ரூத் 1990)

ஹுனைன் போரின் கைதிகளுக்கான ஏற்பாடுகள் மற்றும் அவர்களை விடுதலை செய்வது குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிவான அணுகுமுறையைப் பற்றி நம்பகமான வரலாற்று ஆதாரங்கள் மூலம் ஏற்கனவே எடுத்துரைக்கப்பட்டு விட்டது. இந்த வரலாற்று

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

உண்மையை ஸர் வில்லியம் முயரும் நன்கு அறிவார். அதனால்தான், அவர் தன் குற்றஞ்சாட்டும் பாணியில் விவரித்த போதிலும், இந்த உண்மையை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை. அவர் எழுதுகிறார்:

'ஹுனைன் போரின் அனைத்துக் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டார்கள்.

(The Life Of Mahomet by Sir William Muir, page 435, chapter The HawazinitePrisoners Relased, Mahmot Presents Female Slaves to Ali, Othaman and Omar London Smith, Elder &co, 15 Waterloo Place1878)

அவருடைய இந்தக் கூற்றே அவருடைய குற்றச்சாட்டிற்குப் பதிலடி கொடுக்கிறது. இந்தப் போரின் சம்பவங்களை ஆய்வு செய்ததில், ஆரம்பத்தில் கைதிகள் ஸஹாபிகளின் மேற்பார்வையில் ஒப்படைக்கப்பட்டார்கள். ஆனால், ஏற்பாடுகளுக்கு இறுதி வடிவம் கொடுத்து, அவர்கள் அனைவரும் ஹஸ்ரத் மஸ்வூத் பின் அம்ர் ஃகஃப்பாரி (ரலி) அவர்களின் மேற்பார்வையில் ஜிஃரானாவிற்கு அனுப்பப்பட்டார்கள் என்பதும் தெளிவாகிறது.

பின்னர், தாயிஃபிலிருந்து திரும்பி வந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹவாஸின் குலத்தாருடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது, ஒரு குறிப்பான கருணையுடன் கூடிய அணுகுமுறையுடன் ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட கைதியை விடுதலைசெய்தார்கள்.

முன்பு எடுத்துரைக்கப்பட்ட விவரங்களில் இவை அனைத்தும் கூறப்பட்டுவிட்டது. நான் முன்பும் கூட இவ்விஷயங்களை கூறியிருந்தேன். புகழ்பெற்ற மேற்கத்திய ஆய்வாளர் மாண்ட்கோமெரி வாட் இந்த உண்மையை நன்கு அறிந்தவர். ஏனென்றால், அவர் அதே இடத்தில் இவ்வாறு எழுதுகிறார்:

'முஹம்மத் (ஸல்) அவர்களுக்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, இதைக் கேட்டவர்கள் இந்தக் கதைகளில் கட்டுக் கதைகளைச் செருகியிருக்கலாம் அல்லது இந்தக் கதைகள் சுயமாக உருவாக்கப்பட்டதாகவும், இட்டுக்கட்டப்பட்டதாகவும் இருக்கலாம் என்று தெரிகிறது.

(Mohammed At medina by W. Montgomery Watt, Page 73, Chapter The Battle Of Hunayun, TheConsolidation Of victory Oxford University Press Karachi 2006)

மற்றொரு குற்றச்சாட்டை மார்கோலிஸ் என்பவர் தாயிஃப் தலைவரான மாலிக் பின் அவ்ஃப் நஸரீ பற்றி வைத்துள்ளார். அதாவது, 'மாலிக் பின் அவ்ஃப் கட்டாயப்படுத்தி முஸ்லிமாக ஆக்கப்பட்டார்' என்று கூறுகிறார்.

(Mohammed And The Rise of islam by D.s Margoliouth Page Chapter The Taking of Meccah G.p Putnams son New403, York and London The Knickerbocker PressthirdEdition)

மார்கோலிஸின் இந்தக் குற்றச்சாட்டு முற்றிலும் ஆதாரமற்றது. ஹஸ்ரத் இறைத் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி மேற்கத்திய ஆய்வாளர்களின் பொதுவான அணுகுமுறைக்கு இது ஓர் உதாரணமாகும். அதாவது, அகிலத்தாருக்கெல்லாம் கருணையாளரான நபியவர்களின் கருணை தொடர்பான சம்பவமும் கூட உண்மைக்குச் சற்றும் தொடர்பில்லாதவாறு அன்னார் (ஸல்) பலவந்தம் செய்தார் எனும் சாயம் அதற்குப் பூசப்படுகிறது. இந்தச் சம்பவத்தின் விவரங்கள் ஸீரத் இப்னு ஹிஷாமில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே கூறப்பட்டது போல், அகிலத்தாருக்கெல்லாம் கருணையாளரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹவாஸின் குழுவினர் கேட்ட கருணைக்கான வேண்டுகோளை ஏற்று அவர்களின் கைதிகளையும் செல்வங்களையும் அவர்களுக்குத் திரும்பக் கொடுத்தபோது, அன்னாருக்கு தாயிஃபில் இருந்த தலைவர் மாலிக் பின் அவ்ஃப் பற்றியும் நினைவு வந்தது.'மாலிக் பின் அவ்ஃபின் நிலைமை என்னவென்று சொல்லுங்கள்' என்று கேட்டார்கள். அதற்கு, 'அவர் ஸகீஃப் குலத்தாருடன் தாயிஃபில் இருக்கிறார்' என்று கூறப்பட்டது. அப்போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அதே கருணை மாலிக் பின் அவ்ஃபுக்காக மீண்டும் வெளிப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'நீங்கள் சென்று, அவருக்கு செய்தி சொல்லுங்கள்; அவர் இஸ்லாத்தைத் தழுவினால், அவருடைய மனைவி மக்களும் செல்வங்களும் அவருக்குத் திரும்பக் கொடுக்கப்படும். அதோடு மட்டுமல்லாமல், அவருக்குநூறு ஒட்டகங்களும் வழங்கப்படும்' என்றும் கூறினார்கள்.

இங்கே ஒரு விஷயம் கவனிக்கத்தக்கது; ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெற்றியாளர் ஆவார்கள். மாலிக் பின் அவ்ஃபிடம் இருந்து அன்னாருக்கு எந்த இலாபமும், எந்த பலனும் தேவையிருக்கவில்லை. எந்த சட்டத்தின் கீழும் மாலிக் பின் அவ்ஃப் தொடர்பாக அவர்கள் துளியளவும் பொறுப்புடையவர் அல்ல. இருப்பினும், தமது இயல்பான கருணை உணர்வுடன் இஸ்லாத்தைத் தழுவச் சொல்லி அவருக்கு செய்தி அனுப்புகிறார்கள். மேலும், அவரது மனைவி மக்கள், செல்வம் மற்றும் ஒட்டகங்கள் ஆகியவற்றை வழங்குவதாக உறுதியளிக்கிறார்கள். அங்கோ, மாலிக்கின் இதயத்தில் இஸ்லாம் ஏற்கெனவே குடிகொண்டிருந்தது என்று தெரிகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்தச் செய்தி அவருக்குக் கிடைத்தபோது, அவர் அன்னாரைச் சந்திக்கப்புறப்பட்டார். அவர் தாயிஃபிலிருந்து வந்து ஜிஃரானா அல்லது மக்காவில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்தித்தார். மாலிக் அப்போது முஸ்லிம் ஆகிவிட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு அவருடைய மனைவி மக்களையும், செல்வங்களையும், மேற்கொண்டு நூறு ஒட்டகங்களையும் வழங்கினார்கள். அவர் இஸ்லாத்தைத் தழுவினார். இஸ்லாத்தைத் தழுவும்போது அவர் சில கவிதைகளையும் பாடினார். அவற்றில் ஒரு கவிதை

مَا اِنْ رَاَیْتُ وَلَا سَمِعْتُ بِمِثْلِهٖ
فِی النَّاسِ کُلِّهِمْ بِمِثْلِ مُحَمَّدٍ

என்பதாகும். பொருள்: நான் அனைத்து மக்களிலும் முஹம்மத் (ஸல்) அவர்களைப் போன்ற ஒருவரைப் பார்த்ததுமில்லை; இந்தத் தரத்தில் உள்ள ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டதுமில்லை!'

இவையே ஹுனைன் போரின் முழு சம்பவங்கள் ஆகும். மீதமுள்ள போர் நடவடிக்கைகள் இன்ஷா அல்லாஹ் பின்னர் எடுத்துரைக்கப்படும்!

(அஸ்ஸீரத்துன் நபவிய்யா லி இப்னி ஹிஷ்ஷாம், பக்கம் 797. தாருல் குதுபில் இல்மியா பெய்ரூத், 2001)

இப்போது நான் இரு மர்ஹூம்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். அவர்களின் ஜனாஸா தொழுகையையும் நான் பின்னர் தொழவைப்பேன்.

முதலாவது குறிப்பு, மதிப்புக்குரிய டாக்டர் லயீக் அஹ்மத் ஃபர்ருக் ஸாஹிப் அவர்களுடையதாகும். கனடாவில் இருந்தார்கள்; வஃபாத் ஆகிவிட்டார்கள். இவர் பல ஆண்டுகள் வாழ்வை அர்ப்பணித்த மருத்துவராக ஆஃபிரிக்காவில் தொண்டாற்றி வந்தார்.அவர் கடந்த சில நாட்களுக்கு முன் 83 வயதில்இறந்தார்.

اِنَّا لِلّٰہِ وَاِنَّاۤ اِلَیۡہِ رَاجِعُوۡنَ

மர்ஹூம் வஸிய்யத் செய்தவர் ஆகவும் இருந்தார்.அவரது மறைவுக்குப்பின்

Proprietor off : 044- 2260 1886
RAZIK XEROX & TELECOM
AUTHORISED AIR, BUS, RAIL BOOKING CENTRE
AO MULTI COLOUR PLAN XEROX

➢ PASSPORT, VISA,MONEY TRANSFER, PANCARD,
➢ LAMINATION, SPIRAL BINDING, PRINT OUT,
➢ SCANNING, RECHARGE, COLOUR XEROX,
➢ ALL VEHICLE INSURANCE, COURIER
NO:1,V.V COLONY, 1ST STREET,
ADAMBAKKAM, CHENNAI-600 088
E-MAIL: razikxerox@gmail.com

A. SAMSUL ALAM
A. ABDUL RAHIM

Dealers of Natural Precious & Semi-Precious Gemstones
TOONICE
DEALERS OF PRECIOUS & SEMI-PRECIOUS GEMSTONES
No. 100/59-A, 1st Floor, South Thaikkat Street Melapalayam, Tirunelveli-627005 Tamil Nadu, India
+91 9659389953 toonicegems@gmail.com
Al-Nida GEMS
No. 1/33, 1st Foor Village Road Balaji Nagar Extension Puzhuthivakkam, Chennai-600091 Tamil Nadu, India
+91 9042150339 alnidagems@gmail.com
HG GEMS
HANIYAHANA GEMS CO., LTD.
No. 191/16, Soi Puttha Osot Siphraya, Bangrak Bangkok - 10500 Thailand
+66 638751327 gemscertify22@gmail.com

அவரது மனைவி, ஒரு மகன் மற்றும் இரு மகள்கள் உள்ளனர். மஜ்லிஸ் நுஸ்ரத் ஜஹான் திட்டத்தின் கீழ் 1974 ஆம் ஆண்டு கானாவிற்கு அனுப்பப்பட்டார். 1978 ஆம் ஆண்டு வரை அங்குள்ள மத்திய மருத்துவமனையில் தொண்டாற்றி வந்தார். மூன்று ஆண்டுகள் அர்ப்பணிப்பு காலம் முடிந்த பிறகு, உடல்நலக் குறைவு காரணமாக விடுப்பு கேட்டபோது, ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் அவரை மேலும் ஓராண்டு வேலை செய்யச் சொன்னார்கள். மிகவும் சிக்கலான கேஸ்கள் அவரிடம் வரும். அவர் சில கேஸ்களை, மற்ற மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைப்பார். ஆனால், நோயாளியோ, 'அஹ்மதிய்யா மருத்துவமனையிலும், அஹ்மதி டாக்டரிடமும் மட்டுமே சிகிச்சை பெறுவேன்' என்று கூறுவார். நம்பிக்கை இல்லாத பல அறுவைச் சிகிச்சைகளும் வெற்றிபெற்றன. Strangulated Hernia எனும் மிகவும் கடினமான case -ம் வந்தது. அதற்கு அவர் சிகிச்சை அளித்து அல்லாஹ்விடம் துஆ செய்தார். அல்லாஹ் அதை வெற்றிபெறச் செய்தான். 1984 ஆம் ஆண்டில் அவர் மீண்டும் ஆஃபிரிக்காவிற்கு -கேம்பியாவுக்கு அனுப்பப்பட்டார். 1993 ஆம் ஆண்டு வரை அங்கு தன் வாழ்வை அர்ப்பணித்தார். மேலும், பெரும் தியாக உணர்வுடன் தொண்டாற்றினார்.

அவரது மகன் அவரைப் பற்றி எழுதியுள்ள விஷயங்கள் மிகவும் உண்மையானவை ஆகும். அவர் இவ்வாறு எழுதுகிறார்:

மர்ஹூம் மிகவும் அமைதியான இயல்புடையவர், துஆ செய்பவர், பணிவு, தாழ்மை, பொறுமை, உறுதி ஆகியவற்றுக்கு உதாரணமாகத் திகழ்ந்தார். அவர் தன் முழு வாழ்க்கையையும் மனித குலத்தின் சேவைக்கே அர்ப்பணித்தார். வாழ்வை அர்ப்பணித்திருந்த காலகட்டத்தில், குறிப்பாக கேம்பியாவின் பின்தங்கிய கிராமமான அன்ஜ்வாராவில் உண்ணக் கூட உணவு கிடைக்காது, வெப்பம் அதிகம், மின்சாரம் தண்ணீர் போன்றவையும் இருக்காது. அவ்வாறான கடினமான நிலைமைகளிலும் அவர் அங்கு சேவைசெய்தார்.

அவர் கூறுகிறார்: நானும் நோயுற்றிருந்தேன். என்னுடைய கால்களில் கொப்புளங்கள் தோன்றியிருந்தன. என்னை school-க்கு தூக்கிக் கொண்டு சென்று அங்கு என்னை விட்டுச் செல்வார்கள். இதைப் பற்றி ஒருபோதும் முறையீடு செய்ததில்லை.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் 1988 ஆம் ஆண்டில் அங்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டபோது, குறிப்பாக அவரது வீட்டிற்குச் சென்றார்கள். அங்கு வீட்டில் உட்காருவதற்கு நாற்காலிகள் கூட இருக்கவில்லை. ஆனால் அவ்வாறிருந்தும், நான் உங்களுடன் உணவருந்துவேன் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். மற்ற அனைத்து staff-களையும் வெளியே செல்லுமாறு கூறிவிட்டார்கள். அது மர்ஹூம் அவர்களுக்கு ஒருபெரும் நற்பேறு ஆக இருந்தது.

லாகூரில் பணியாற்றிக் கொண்டிருக்கும்போது நடந்த சம்பவத்தை மர்ஹூம் அவர்கள் கூறிவந்தார்கள். அது என்னவென்றால், எனக்கு இரத்த அழுத்தம் மிகக் குறைவாகி, மேஜையில் நான் படுத்து விட்டேன். மரணம் ஏற்பட்டுவிடும் என்று நான் கருதினேன்.

மருத்துவர்கள் தங்களைப் பற்றி இவ்வாறு எண்ணம் கொள்வதுண்டு; அவர்களுக்கு தெரியவும் செய்கிறது. அப்போது 'உமது நேரம் இன்னும் வரவில்லை, கனடாவுக்குச் சென்ற பிறகுதான் வரும்' என்று ஒரு குரல் கேட்டது. பிறகு அல்லாஹ் முழுமையான முறையில் பல ஆண்டுகளுக்குப் பிறகு அதை நிறைவேறினான்.

ஒருமுறை, இவர் 1978 ஆம் ஆண்டில் கானாவிலிருந்து திரும்பி வந்தபோது, இவர்களின் ஜமாஅத் குழு ஒன்று ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களைச் சந்திக்கச் சென்றது. அப்போது ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள், 'நீங்கள் திரும்பி வந்துவிட்டீர்கள்! நீங்கள் எங்கிருந்து வந்தீர்களோ, அங்கேயே உங்களைத் நான் மீண்டும் அனுப்புவேன் 'என்று கூறினார்கள்.

மர்ஹூம் கூறுகிறார்: எனக்குப் புரியவில்லை !ஏனென்றால் நான் மீண்டும் வாழ்வை அர்ப்பணிக்கும் எண்ணத்தில் இருக்கவில்லை. ஆனால், 'உங்களது நியமனம் பரிசீலனையில் உள்ளது; எனவே வாருங்கள்' என்று 1983-ம் ஆண்டு நுஸ்ரத் ஜஹான், ரப்வா செகரட்டரி அவர்களிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. 1984 ஆம் ஆண்டில், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவரை மீண்டும் ஆப்பிரிக்காவுக்கு, காம்பியாவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

அவர் கூறுகிறார்: 'இது எனக்கு மிகவும் வித்தியாசமாகவும், ஓர் அற்புதம் போலவும் தோன்றியது. ஏனென்றால், ஒரு கலீஃபா ஒரு வார்த்தை சொன்னார்கள்; மற்றொரு கலீஃபா அதை நிறைவேற்றினார்கள்.

கானாவின் முன்னாள் அமீர், மர்ஹூம் வஹாப் ஆதாம் ஸாஹிப் அவர்கள் இவ்வாறு கூறிவந்தார்கள்:

'டாக்டர் ஸாஹிப் எப்போது ஒரு நோயாளியின் மோசமான நிலையைக் கண்டாலும் உடனடியாக நஃபில் தொழத் தொடங்கிவிடுவார்கள்' என்று கூறி வந்தார்கள். நானும் கானாவில் இருந்துள்ளேன். அவர்களுடன் காலத்தைக் கழித்திருக்கிறேன். நான் அவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர் மிகவும் உயர்ந்த குணமுள்ளவர், பணிவுள்ளவர், மற்றும் சேவை செய்யும் மனிதர். வாழ்வை அர்ப்பணித்தவர்களை மிகவும் மரியாதை செய்பவர். விருந்தோம்பல் அவரிடமும் அவரது மனைவியிடமும் நிரம்பியிருந்தது. அவரிடம் இருந்த பல தனிச்சிறப்புகள் மிகக் குறைவான மக்களிடமே காண முடியும்.

தாவூத் ஹனீஃப் ஸாஹிப்அவர்கள் தற்போது ஜாமிஆ கனடாவின் பிரின்சிபல் ஆக இருக்கிறார்கள். அவர்கள் காம்பியாவில் அமீர் ஜமாஅத்தாக இருந்தார்கள்.

அவர் கூறுகிறார்:

மர்ஹூம் எப்போதும் மனித குலத்தின் சேவைக்காகத் தயாராகஇருப்பார். இரவு பகல் பார்க்க மாட்டார். எவராவது துன்பத்தில் இருக்கிறாரா? அவருக்குஉடனடியாகச் சேவைசெய்ய வேண்டும் என்று மட்டுமே பார்ப்பார்.

அவர்கள் பணியமர்த்தப்பட்ட பகுதி ஒரு சிறிய பகுதி ஆகும். அங்கு செல்ல இரண்டு படகுகளில் மாறி செல்ல வேண்டியிருந்தது. மேலும், அவர்களின் தங்குமிடமும் ஒரு பழைய, உபயோகமற்ற கிடங்காக இருந்தது. அதனைச் சுத்தம் செய்து வீடாகப் பயன்படுத்தினார்கள். ஆனால் பெரும் மகிழ்ச்சியுடன் வசித்தார்கள். அங்கே மின்சாரமும் இல்லை; தண்ணீரும் இல்லை; தொலைபேசியும் இல்லை. கிணறுகள் அல்லது ஆற்றிலிருந்து தண்ணீரை அவரே கொண்டு வர வேண்டியிருந்தது. மெழுகுவர்த்தி அல்லது லாந்தர் விளக்கு பயன்படுத்தப்பட்டது. அறுவைச் சிகிச்சை பொதுவாக பகல் நேரத்தில் சூரிய ஒளியில் செய்வார்கள். மேலும், சமையல் அடுப்பில்,கேஸ்அடுப்பில் தங்கள் அறுவைச் சிகிச்சை கருவிகளை சுத்திகரிப்பு செய்து கொள்வார்கள். இவ்வாறான சூழ்நிலையில் தொண்டாற்றி வந்தார்கள். இன்றைய கால கட்டத்தில் உள்ள மருத்துவர்கள் இதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக மாட்டார்கள். இது எப்படி என்பதே அவர்களுக்கு தெரியாது!

ஒருமுறை அவர்கள் அங்கே தங்கியிருந்தபோது திருடர்கள் ஒரு வீட்டில் கொள்ளையடித்தார்கள். சப்தம் கேட்டதும் மக்கள் திருடர்களைச் சூழ்ந்து கொண்டார்கள். அதனால், அவர்கள் தங்கள் வாள் போன்ற ஓர் ஆயுதத்தை வெளியே எடுத்து ஒரு நபரைத் தாக்கினார்கள். அதனால், அவருக்குத் தலையில் கடுமையான காயம் ஏற்பட்டது. உடனடியாக இரவில் டாக்டர் ஸாஹிப் அழைக்கப்பட்டார். அவர் உடனடியாக அவருக்கு அறுவைச் சிகிச்சை செய்தார். மேலும், டார்ச் லைட் மற்றும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் அவருக்கு ஆபரேஷன் செய்தார்.இன்று அதைப் பற்றி கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. அல்லாஹ்வின் அருளால் அறுவை சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது; நோயாளி காப்பாற்றப்பட்டார்.

ஒருமுறை ஓர் ஏழை மனிதர் டாக்டர் ஸாஹிப் அவர்களிடம் வந்து, 'என் கிராமம் மிகவும் தூரத்தில் உள்ளது. போக்குவரத்து

வசதியும் இல்லை. நோயாளியை என்னால் கொண்டு வர முடியவில்லை. நீங்கள் தயவுசெய்து நோயாளியைப் பார்க்க வரவேண்டும்' என்று கூறினார். அவர்கள் அப்போதே அவருடன் புறப்பட்டுச் சென்று, நோயாளியைப் பார்த்து அவருக்கு சிகிச்சை அளித்தார்கள். அவர் குணமடைந்தார்.

அந்தப் பகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் இந்த விஷயத்தை அறிந்தபோது, இந்த விஷயத்திற்காக அன்னாருக்கு நன்றி தெரிவிக்க அன்னாரது கிளினிக்கிற்கு வந்தார். மேலும், அவர் வரும்போதெல்லாம், அன்னாரை சந்தரிப்பதற்காக அன்னாரிடம் கட்டாயம் வருவார்; அத்துடன்' உண்மையான முறையில் மனிதகுல சேவையை தாங்களே செய்து கொண்டிருக்கிறீர்கள்' என்று தெரிவித்து வந்தார்.

அல்லாஹ் மர்ஹூமுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையின் நடைமுறையை மேற்கொள்வானாக! தகுதிகளை உயர்த்துவானாக! மனைவி மக்களையும் தன் பாதுகாப்பில் வைப்பானாக! அவர்களுக்கு பொறுமை மற்றும் தைரியத்தை வழங்குவானாக!

இரண்டாவது ஜனாஸா, ஹைதராபாத், இந்தியாவைச் சார்ந்த ஹமீத் அஹ்மத் ஃகவ்ரீ ஸாஹிப் அவர்களுடையதாகும். இவரும் கடந்த சில நாட்களுக்கு முன் 74 வயதில் இறந்தார்.

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

மர்ஹூம் வஸிய்யத் செய்தவராக இருந்தார். அவரது மறைவுக்குப்பின் அவரது மனைவி, ஒரு மகள் மற்றும் நான்கு மகன்கள் உள்ளனர். பேரப் பிள்ளைகளும் உள்ளனர். அனைத்து பிள்ளைகளும் ஏதோ ஒரு விதத்தில் ஜமாஅத்திற்குச் தொண்டாற்றி வருகிறார்கள். மர்ஹூம் அவர்கள், நாஸிர் அஃலா காதியான்,இனாம் ஃகவ்ரீ ஸாஹிப்- அவர்களின் இளைய சகோதரர் ஆவார். மேலும், இவர் ஜமாஅத்தின் முபல்லிஃக் மற்றும் அல்பானியா ஜமாஅத்தின் தலைவருமாகிய ஸமத் ஃகவ்ரீ ஸாஹிபின் தந்தையும் ஆவார்.

மர்ஹூம் அவர்கள், நோன்பு, தொழுகை ஆகியவற்றைப் பேணக்கூடியவர். தஹஜ்ஜுத் தொழக்கூடியவர். திருக்குர்ஆனின் மீது மிகுந்த அன்பு வைத்திருந்தார்; அதை மனனம் செய்யவும் முயற்சி செய்து வந்தார். உடல்நலம் இருக்கும் வரை, ஃபஜ்ர் தொழுகைக்கு முன், அஹ்மதி வீடுகளுக்குச் சென்று தொழுகைக்காக கதவைத் தட்டியவாறு பள்ளிவாசலுக்கு செல்வார்கள். தொழுகைக்காக மக்களை அழைப்பார். ஹஜ் மற்றும் உம்ரா செய்யும் நற்பேறையும் பெற்றார். கிலாஃபத்தின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பவர். எந்தக் கட்டளையாக இருந்தாலும், அது சிறிய கட்டளையாக் இருந்தாலும், பெரிய கட்டளையாக இருந்தாலும் அதை செயல்படுத்த வேண்டும் என முயற்சிப்பார்கள். தானும் அமல் செய்யவேண்டும்; பிறகு, ஜமாஅத்திற்குச் சொல்வேன்' என்று முயற்சி செய்வார். ஏனென்றால், அவர்கள் ஜமாஅத்தில் குத்பாக்களும் கொடுப்பார்கள்.அதனால், நான் முதலில் அதன் மீது அமல் செய்வேன், பிறகு ஜமாஅத்திற்குச் சொல்வேன்'என்று கூறுவார்கள். இதில் அல்லாஹ்வின் அருளால் அவர்கள் வெற்றியும் பெற்றார்கள்.

மர்ஹூம் அவர்கள் ஹோமியோபதி சிகிச்சையும் அளிப்பார். வீட்டில் அதிகளவில் மருந்துகளை வைத்திருந்தார். அதனை இலவசமாகவே நோயாளிகளுக்குக் கொடுப்பார்.பொருள் தியாகத்தில் முன்னணியில் இருப்பார்.ஒரு நெருங்கிய உறவினர் ஒருவர் கூறினார்: எனக்கு ஹிஸ்ஸா ஆமத் பாக்கி இருந்தது. அப்போது மர்ஹூம் செகரட்டரி மாலிடம் சென்று, அவர் சார்பாக அந்த சந்தாவைச் செலுத்திவிட்டார். அதற்குப் பிறகு, அவருக்கு எச்சரிக்கை செய்யும் விதத்தில், 'இனிமேல் உனக்கு இது பாக்கி இருக்கக் கூடாது. முதலில் சந்தா கொடுத்த பிறகு வேறு வேலைகளைப் பார்" என்று கூறினார். மர்ஹூம் அவர்கள், மிகவும் உறவு முறையை பேணுபவர். தன் உறவினர்களைத் தன் வீட்டில் அடிக்கடி ஒன்று சேர்ப்பார். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பெறுவார். தலைமையக பிரதிநிதிகளுக்கும் முபல்லிஃகீன்களுக்கும் மிகவும் மரியாதை செலுத்துவார்.

மர்ஹூம் நாயிப் அமீர் ஹைதராபாத், செகரட்டரி தஃலீமுல் குர்ஆன், தம் வட்டாரத்தின் ஜமாஅத் ஸத்ர் ஆகவும் இருந்துள்ளார். நாஸிம் அன்ஸாருல்லாஹ் ஆகவும் இருந்துள்ளார். நாயிப் ஸத்ர் மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் தென்னிந்தியா எனப் பல ஜமாஅத் தொண்டுகளை செய்யும் நல்வாய்ப்பை பெற்றுள்ளார்.

எவ்வாறிருப்பினும்,போதுமான அளவு ஜமாஅத் தொண்டுகள் உள்ளன. ஒருமுறை அவர் இங்கும் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தார்.

அல்லாஹ் அவர்களுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக! அவர்களின் மகன் அல்பானியாவில் ஜமாஅத்தின் முபல்லிஃக் ஆக இருப்பதால், ஜனாஸாவில் கலந்து கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அவருக்கும் பொறுமையையும், தைரியத்தையும் வழங்குவானாக!

நான் அவர்களின் ஜனாஸா தொழுகையைப் பின்னர் தொழ வைப்பேன்.

(அல் ஃபஸ்ல் இன்டர் நேஷனல், அக்டோபர் 24, 2025, பக்கம் 2 - 7)

தமிழாக்கம்
முரப்பி
A.P.A தாரிக் அஹ்மது

** * * * * *

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

## 1- ம் பக்கத் தொடர்ச்சி.... (மல்ஃபூஸாத்)

இறைவன் இறையச்சம் கொண்டவர்களின் தொழுகையை மட்டுமே ஒப்புக் கொள்கின்றான். இதன் காரணமாகவே எந்த நபர்களின் சொந்த தொழுகையே ஒப்புக் கொள்ளப்படுதலின் அந்தஸ்தை எட்டவில்லையோ அப்படிப்பட்ட நபர்களுக்குப் பின்னால் நின்று தொழாதீர்கள் என்று கூறப்பட்டுள்ளது.

வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஒப்புக் கொள்ளாததன் விளைவு

தொன்று தொட்டே மார்க்க சான்றோர்களின் வழிமுறை இவ்வாறே உள்ளது. அதாவது, எந்த நபர் உண்மையை எதிர்க்கின்றாரோ, மெது மெதுவாக அவருடைய ஈமான் வீணாகி விடுகின்றது. இறைத் தூதர் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாதவர் நிராகரிப்பாளர் ஆவார். ஆனால், மஹ்தி மற்றும் மஸீஹை ஒப்புக் கொள்ளாதவருடைய ஈமானும் பறிபோய்விடும். முடிவு ஒன்றே ஆகும். முதலில் எதிர்ப்பு ஏற்படும்; பின்னர் தொடர்பின்மை பின்னர் பகைமை பின்னர் கிளர்ச்சியும் இறுதியில் (ஈமான்) பறிபோய் விடும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 2, பக்கம் 96 - 97, காதியான் பதிப்பு 2018-ம் ஆண்டு)

** * * * * *

**நீங்கள் நமது அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் வழிகாட்டலின்படி கீழ்காணும் இந்த மூன்று துஆக்களை தினமும் செய்து வருகின்றீர்களா?**

سُبْحَانَ اللّٰهِ وَبِحَمْدِهٖ سُبْحَانَ اللّٰهِ الْعَظِيْمِ
اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّآلِ مُحَمَّدٍ

اَسْتَغْفِرُ اللّٰهَ رَبِّيْ مِنْ كُلِّ ذَنْبٍ وَّاَتُوْبُ اِلَيْهِ

رَبِّ كُلُّ شَيْءٍ خَادِمُكَ
رَبِّ فَاحْفَظْنِيْ
وَانْصُرْنِيْ وَارْحَمْنِيْ

** * * * * *

**இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் வருடாந்திர இஜ்திமா காதியான் - 2025**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள்

**வழங்கிய தூதுச் செய்தி**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் அன்பிற்குரிய உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹூ!

இந்திய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வுக்கு தனது ஆண்டு இஜ்திமாவை நடத்தும் நல்வாய்ப்பு கிடைத்திருக்கிறது என்பதை அறிந்து நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன். அல்லாஹ் இதை எல்லா வகையிலும் வெற்றிகரமானதாகவும், அருளுக்குரியதாகவும் ஆக்குவானாக! ஆமீன்!

இந்த சந்தர்ப்பத்தில் தூதுச் செய்தி அனுப்புமாறு என்னிடம் கேட்கப்பட்டுள்ளது. ஐவேளைத் தொழுகைகளை தவறாமல் நிறைவேற்றுவதற்கும், உங்கள் மனைவி, மக்களையும் அதைக் கடைப்பிடிக்கச் செய்வதற்கும் இந்நேரத்தில்நான் உங்களுக்கு கவனமூட்ட விரும்புகிறேன்.

திருக்குர்ஆனில் பல இடங்களில் தொழுகையின் முக்கியத்துவம் குறித்து பல்வேறு வழிமுறைகளில் எடுத்துரைக்கப்பட்டு அதன் பக்கம் கவனமூட்டப்பட்டுள்ளது. மேலும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் தொழுகை இறைவணக்கத்தின் சத்து என்று கூறியுள்ளார்கள். மறுமை நாளில் அடியார்களிடம் முதலில் கணக்குக் கேட்கப்படும் விஷயம் தொழுகையாகும். இந்தக் கணக்கு சரியாக இருந்தால்அவர் வெற்றி பெற்று விடுவார்; அவர் இரட்சிப்பு பெற்று விடுவார்.இல்லையென்றால், அவர் இழப்பைச் சந்திப்பார்; நஷ்டமடைவார் என்றும் அன்னார் கூறியுள்ளார்கள். (திர்மிதீ, அப்வாபுஸ் ஸலாத்)

பிறகு, பிள்ளைகளையும் தொழுகையை கடைபிடிக்கச் செய்பவர்களாக ஆக்குவது தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வழிகாட்டல் வழங்கும்போது, பிள்ளைகள் ஏழு வயதை அடையும் போது அவர்களுக்கு தொழுகையைக் கடைப்பிடிக்கச் சொல்ல வேண்டும் என்றும், பத்து வயதை அடையும்போது தொழுகையை கடைபிடிக்கச் செய்ய ஏதேனும் கடுமை காட்ட நேர்ந்தாலும் அவ்வாறு செய்யலாம் என்றும் கூறியுள்ளார்கள். (அபூதாவூது, கிதாபுஸ் ஸலாத்)

அதேபோன்று, ஜமாஅத்தான தொழுகைக்கு தனித்துத் தொழும் தொழுகையை விட 27 மடங்கு அதிக நன்மை உண்டு என்று ஒரு ஹதீஸில் கூறப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:**

தொழுகையை ஜமாஅத்தாக தொழுவதற்கு அதிக நன்மை வைக்கப்பட்டதன் நோக்கம், ஒற்றுமையை உருவாக்குவதே ஆகும். அந்த ஒற்றுமையை நடைமுறையில் கொண்டு வர வேண்டுமென்பதில் எந்த அளவுக்கு வழிகாட்டுதலும் வலியுறுத்தலும் இருக்கிறது என்றால், ஒருவருக்கொருவர் கால்களை சமமாக வைக்க வேண்டும் என்றும், வரிசை நேராக இருக்க வேண்டும் என்றும், ஒருவருக்கொருவர் சேர்ந்து நிற்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. இதன் பொருள், அவர்கள் அனைவரும் ஓர் உடலைப் போல் ஆகி விட வேண்டும் என்பதும், ஒருவரின் ஒளியானது மற்றவருக்குள்ளும் ஊடுருவ வேண்டும் என்பதும், சுயநலத்தையும், தன்னலத்தையும் உருவாக்கும் வேறுபாடுகள் இல்லாமல் ஆக வேண்டும் என்பதும் ஆகும். மற்றவர்களின் ஒளியை ஈர்க்கும் சக்தி மனிதனுக்குள் உள்ளது என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 247-248)

எனவே, ஜமாஅத்தான தொழுகை மூலம் அல்லாஹ் உம்மத்தில் உருவாக்க விரும்பும் ஒற்றுமை வெளிப்படுவதோடு அங்கு பரஸ்பர நன்மைகளின் தாக்கமும் ஏற்படுகிறது. மேலும், நன்மைகளில் முன்னேறுவதற்கும், வளர்ச்சி அடைவதற்கும், ஆன்மிகத்தில் முன்னேறுவதற்கும் ஆற்றல் அதிகரிக்கின்றது. இந்த ஒற்றுமை உருவாகும்போது ஷைத்தானிய சக்திகள் பலவீனமாகி விடுகின்றன.

இன்று உலகில் ஏற்பட்டுள்ள நிலைமைகளின் தீய தாக்கத்திலிருந்து உங்களையும், உங்களது சந்ததியினரையும் பாதுகாத்துக் கொள்ள அல்லாஹ்வின் பக்கம் கலப்பற்ற முறையில் திரும்புவது மிகவும் அவசியம் ஆகும்.

எனவே, இந்த விஷயத்தின் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வது அன்ஸாருல்லாஹ்வின் மிகப் பெரிய பொறுப்பாகும். தொழுகையை நிலை நாட்டுதலின் உரிமையை நிறைவேற்றுபவர்களாக ஆக வேண்டும். உங்களது பிள்ளைகளுக்கும், வீட்டிலுள்ளவர்களுக்கும் தொழுகையின் பக்கம் கவனமூட்டுங்கள். அனைத்து அன்ஸாரும்இதன் பக்கம் கவனம் செலுத்தினால் ஒரு புரட்சி ஏற்பட முடியும். எனவே, இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டிய அதிக தேவை உள்ளது.

மேலும், இக்காலத்தில் மார்க்க அமர்வுகளை நடத்துவதற்காக, ஆண்டு மாநாடுகளையும் இஜ்திமாக்களையும் நடத்துவதற்கான ஏற்பாடுகளையும் அல்லாஹ் நமக்குச் செய்துள்ளான். இங்கு நாம் ஒன்று கூடுகிறோம் என்றால், அதற்கான காரணம் மார்க்க விஷயங்களையும் கேட்க வேண்டும் என்பதற்காகவும், சேர்ந்து தொழவும் வேண்டும் என்பதற்காகவும்,அன்பும் நேசமும் உருவாக வேண்டும் என்பதற்காகவும் ஆகும். இது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் மூலமாக அல்லாஹ் நமக்கிடையில் ஏற்படுத்தியுள்ள ஒரு கூடுதல் விஷயமாகும். இதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். நன்றி செலுத்துவதற்குரிய உண்மையான வழிமுறை, நாம் அல்லாஹ்வுக்குரிய உரிமைகளையும் செலுத்துவோம் என்றும் அடியார்களுக்குரிய உரிமைகளையும் செலுத்துவோம் என்றும் நாம் உறுதிமொழி எடுத்துக் கொள்வதே ஆகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: தொழுகை அல்லாஹ்வின் உரிமை ஆகும்...... இது மார்க்கத்தை சீர்படுத்துகிறது; ஒழுக்கங்களை சீர்படுத்துகிறது; பௌதிகத்தை சீர்படுத்துகிறது. தொழுகையின் இன்பமானது உலகின் மற்ற அனைத்து இன்பங்களையும் மிகைத்து விடுகின்றது...... திருக்குர்ஆனில் இரண்டு சுவனங்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. அவற்றில் ஒன்று உலகின் சுவனம். அது தொழுகையின் இன்பம் ஆகும். (மல்ஃபூஸாத் தொகுதி 6, பக்கம் 370-371)

தொழுகையில் உங்களுக்கு இன்பம் ஏற்பட்டால், நீங்கள் உலகத்தின் சுவனத்தைப் பெற்றுவிட்டீர்கள் என்று புரிந்து கொள்ளுங்கள். எனவே, அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு வாரிசுகளாக ஆவதற்கு நாம் உழைக்க வேண்டியது வரும். இறைவணக்கங்களின் உண்மையான உரிமையை நிறைவேற்ற அல்லாஹ் நமக்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அவனைப் பற்றிய ஞானம் நமக்கு கிடைக்கட்டுமாக! நம்மை (மட்டும்) சீர்திருத்திக் கொள்பவர்களாக இல்லாமல்நாம் நமது பிள்ளைகளுக்கும் ஒரு முன்மாதிரியாக ஆக வேண்டும். ஆமீன்!

வஸ்ஸலாம்

எளியவன்

மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

** * * * * * *

**இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் வருடாந்திர இஜ்திமா காதியான் - 2025**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**

(அய்யதஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள்

**வழங்கிய தூதுச் செய்தி**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

மதிப்பிற்குரிய இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் உறுப்பினர்களே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு!

அல்லாஹ்வின் அருளால் இந்திய மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவுக்குத் தனது தேசிய வருடாந்திர இஜ்திமாவை நடத்துவதற்கான நல்வாய்ப்பு கிடைக்கிறது.

அல்லாஹ் இந்த இஜ்திமாவை எல்லா வகையிலும் மிகவும் அருளுக்குரியதாகவும், வெற்றிக்குரியதாகவும் ஆக்குவானாக! அனைத்து காதிம்களும், திஃப்ல்களும் இதன் எல்லா நிகழ்ச்சிகளிலிருந்தும் பயன் பெறுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! ஆமீன்!

அஹ்மதிய்யா ஜமாஅத்தில் காதிம் மற்றும் திஃப்ல் என அழைக்கப்படும் உங்கள் மீது மிகவும் முக்கியமான பொறுப்புகள் இருக்கின்றன. உங்களை இறைவன் உலகத்துக்குத் தொண்டு செய்வதற்காகப் படைத்துள்ளான். எனவே, எல்லாவற்றிற்கும் முதலாக, நீங்கள் இறைவனுடன் உங்கள் தொடர்பை வலுப்படுத்த வேண்டும். அவனுக்கு முன்னால் குனிந்தவாறு உங்களுடைய இறைவணக்கங்களின் தரங்களை உயர்ந்தவையிலும் உயர்ந்தவையாக ஆக்கிக் கொண்டே செல்ல வேண்டும்.

எனவே குறிப்பாக, **உங்களுடைய ஐவேளை தொழுகைகளை முறையாகவும், பணிவுடனும், தன்னடக்கத்துடனும் நிறைவேற்றுவதற்கான வழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். திருக்குர்ஆன் ஓதுவதையும், அதன் போதனைகளின்படி செயல்படுவதையும் உங்கள் வாழ்வின் வழக்கமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.**

அல்லாஹ்வுடன் உங்களுக்குத் தொடர்பு அதிகரிக்க அதிகரிக்க உங்களுடைய ஈமானும், உறுதியான நம்பிக்கையும் முதிர்ச்சியடைந்து கொண்டே செல்லும். அதன் விளைவாக, அல்லாஹ் தன்னுடைய எண்ணற்ற அருள்கள் மற்றும் அருட்கொடைகளுக்கு உங்களை உரிமையாளர்கள் ஆக்கி விடுவான். நீங்கள் முன்னேற்றப் பாதைகளைக் கடந்தவாறு உலகம் மற்றும் சமூகத்தில் அமைதி மற்றும் சமாதானத்தின் சூழலை உருவாக்கக்கூடியவர்களாக இருப்பீர்கள்.
இன்ஷா அல்லாஹ்!

ஆனால், அதற்காக மிகவும் கடினமாக உழைக்க வேண்டிய மற்றும் முயற்சி செய்ய வேண்டிய தேவை இருக்கிறது. அஹ்மதிய்யா கிலாஃபத்துடன் கலப்பற்றத் தன்மை மற்றும் நன்றியுணர்வு ஆகியவற்றுடன் கூடிய தொடர்பை அதிகரிக்க வேண்டிய அவசியமுள்ளது. காலத்தின் கலீஃபாவின் ஒவ்வொரு கட்டளை மற்றும் ஒவ்வொரு வழிகாட்டலின்படி முழு மனதுடன் செயல்பட வேண்டிய தேவையுள்ளது. ஏனெனில், இதுதான் அந்த அடிப்படை ஆகும். இதன் விளைவாக அடுத்து உங்களுக்கு முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கான வழிகள் திறந்து கொண்டே செல்லும்.

நினைவில் கொள்ளுங்கள்! உங்களுடைய எல்லா விதமான முன்னேற்றங்களின் இரகசியம் கிலாஃபத்துடன் இணைந்திருப்பதிலேயே ஒளிந்துள்ளது. இதன் மூலம், கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்விற்கான தொடர்பு எப்பொழுதும் உங்களை மார்க்கத்திலும் உலகத்திலும் வெற்றிபெறுபவர்களாக ஆக்கிக் கொண்டே செல்லும். இன்ஷா அல்லாஹ்!

அஹ்மதி காதிம்களின் மற்றுமொரு மிகப் பெரிய பொறுப்பு இதுவும் ஆகும்: அதாவது நீங்கள் உங்களுடைய சந்ததிகளுக்குத் தர்பிய்யத் வழங்குவதன் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். அவர்களை ஜமாஅத்துடன் வலுவுடன் இணைத்து வைக்க வேண்டும். உங்களுடைய வீடுகளில் நன்மை, இறையச்சம் மற்றும் அன்பு ஆகியவற்றிற்கான சூழலை உருவாக்க வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் உங்களுடைய செயல் முன்மாதிரிகளைக் கண்டு பாடம் கற்றுக் கொள்வார்கள். இஸ்லாத்தின் போதனைகளை நன்கு அறிந்து, எதிர்காலத்தில் உலகத்தில் அமைதி மற்றும் சமாதானத்திற்கான தூதுச் செய்தியையும், இஸ்லாத்தின் அழகான போதனைகளையும் பரப்பக்கூடியவர்களாக திகழ்வார்கள்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

நீங்கள் முதலில் நல்லவர்கள் ஆகிடுங்கள். மேலும், உங்களுடைய சந்ததிகளுக்கு நன்மை மற்றும் இறையச்சத்திற்கான மிகச் சிறந்த முன்மாதிரியாக ஆகிடுங்கள். அவர்களை இறையச்சம் உடையவர்களாகவும், மார்க்கப்பற்று உள்ளவர்களாகவும் ஆக்குவதற்காக முயற்சியும், துஆவும் செய்திடுங்கள். நீங்கள் அவர்களுக்காக பொருள் சேர்த்து வைப்பதில் எந்த அளவுக்கு முயற்சி செய்கிறீர்களோ அதே அளவு இந்த விஷயத்தில் முயற்சி செய்யுங்கள். இறைவனுடன் உறவு இருக்காத வரை, அவனுடன் உண்மையான தொடர்பு உருவாகி விடாத வரை எந்த விஷயமும் பயனளிக்க முடியாது என்பதை நன்றாக நினைவில் கொள்ளுங்கள்.
(மல்ஃபூஸாத் தொகுதி 07, பக்கம் 320, 2022 பதிப்பு)

நீங்கள் இந்தப் பொறுப்புகளைப் புரிந்து, இவற்றை ஆகச் சிறந்த முறையில் நிறைவேற்ற முயற்சி செய்வீர்களாயின், அல்லாஹ்வின் அருள்களைப் பெறக்கூடியவர்களாக இருப்பீர்கள். ஜமாஅத்தின் ஒளிமயமான எதிர்காலத்தின் அடித்தளங்களை உறுதியாக்கிக் கொண்டே செல்வீர்கள்.

எல்லாம் வல்ல அல்லாஹ் உங்கள் அனைவருக்கும் இந்த விஷயங்கள்படி அமல் செய்தவற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக! இந்த இஜ்திமாவை உங்களுக்கு ஓர் ஆன்மிகப் புரட்சிக்கான வழிவகையாக ஆக்குவானாக! ஆமீன்!

வஸ்ஸலாம்

எளியவன்
மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது
ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்

** * * * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்
∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 10 THU 13 NOV 2025 Issue No. 46

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

**1- ம் பக்கத் தொடர்ச்சி....**
**(தஃப்ஸீரே கபீர்)**

அவர்களைச் சீ என்று கூடச் சொல்லாதீர்! அவர்களை ஏசவும் வேண்டாம்; அவர்களிடத்து (எப்போதும்) இனிமையாகப் பேசுவீராக!

தற்போது இந்த இடத்தில் வெளிப்படையில் முஹம்மது ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் உரையாடப்படுகின்றது. ஆனால், இதன் பொருள் அன்னாருடைய சமுதாயம் ஆகும். ஏனெனில், அன்னாருடைய தாயார் அன்னார் (ஸல்) பருவமடைவதற்கு முன்னரே மரணமடைந்து விட்டிருந்தார்கள்.

இதே சட்டத்தின் அடிப்படையில், இங்கு நபிமார்களிடம் உரையாடப்பட்டுள்ளது என்றபோதிலும் அதன் பொருள் அந்த நபிமார்களை பின்பற்றுகின்றவர்கள் ஆவர். நீங்கள் ஹலால் மற்றும் தூய பொருட்களை உண்ணுங்கள்; ஏனெனில், இதன் விளைவாக உங்களுக்கு நற்செயல்களை மேற்கொள்வதற்கு நற்பேறு கிடைக்கும் என்று அல்லாஹ் அவர்களுக்கு கட்டளை வழங்கியுள்ளான்.

உண்மை இதுவாகும். அதாவது மனிதன் உண்ணும் உணவானது அவனது ஒழுக்கத்தின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. (ஒரு நபர் உண்ணும்) ஓர் உணவில் எத்தகைய தாக்கங்கள் காணப்படுமோ உடலிலும் அல்லது ஒழுக்கத்திலும் அத்தகைய மாற்றங்கள் ஏற்படத் துவங்கி விடுகின்றன. உலகில் மனிதன் தனது அனைத்து இயல்பான உணர்வுகளையும் எழுச்சியடையச் செய்வதற்கும், அவற்றை முன்னேற்றம் பெறச்செய்வதற்கும் அவசியம் உள்ளது. அப்போதுதான் அவன் அவற்றை உரிய சந்தர்ப்பத்தில் பயன்படுத்தி அல்லாஹ்வின் திருப்தியைப் பெற முடியும். எனவே எந்த உணவுகள் மனிதனின் உடல் ஆரோக்கியம். நல்லொழுக்கம் அல்லது ஆன்மிக நிலை போன்றவற்றில் தீங்கை ஏற்படுத்துமோ அந்த உணவுகளை பயன்படுத்துவதை திருக்குர்ஆன் தடுத்துள்ளது.

உதாரணமாக, இறந்தவை, இரத்தம் மற்றும் பன்றி இறைச்சி போன்றவற்றை அல்லாஹ் ஹராமாக்கியுள்ளான். இதே போன்று எந்தெந்த பொருள்களில் அல்லாஹ் அல்லாதவற்றின் பெயர் கூறப்பட்டுள்ளதோ அத்தகைய பொருள்களை அல்லாஹ் ஹராமாக்கியிருக்கின்றான்.

இந்தப் பொருட்களில் தன்னகத்தே பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தாத எந்தவொரு பொருளும் இல்லை என்பது வெளிப்படையாகும். இறந்தவற்றையே எடுத்துக் கொள்ளுங்கள்; ஒரு விலங்கு இறந்து விட்டால், பின்னர் அது தொடர்பாக இவ்வாறே கூறப்படுகின்றது. அதாவது ஒன்று, அது முற்றிலும் முதுமையடைந்து இறந்துள்ளது அல்லது ஏதாவது விஷப் பிராணிகள் கடித்ததன் காரணமாக இறந்துள்ளது அல்லது ஏதாவது நோய் அல்லது விஷத்தின் காரணமாக மரணித்துள்ளது. மேலும் இந்த எல்லா விஷயங்களும் எப்படிப்பட்டவை என்றால், அவை அந்த விலங்கின் இறைச்சியை விஷத்தன்மைக் கொண்டதாகவும், பயன்படுத்தப்பட தகுதியற்றதாகவும் ஆக்கிவிடுகின்றன. ஒருவேளை அந்தப் பிராணி ஏதாவது கடும் விபத்தால் மரணித்திருந்தது என்றால், உதாரணமாக, கிணற்றில் விழுந்து அல்லது விலங்குகள் தங்களுக்குள் சண்டையிட்டு மரணித்து விட்டன என்றால் அப்போதும் அதன் இரத்தத்தில் நச்சுத்தன்மை உருவாகி விடுகின்றது. அது அதனுடைய இறைச்சியை பயன்படுத்துவதற்குத் தகாததாக ஆக்கிவிடுகின்றது. இரத்தம் என்ற பொருளோ எப்படிப்பட்டதென்றால், அது சுயமே தன்னகத்தே பலவகையான நச்சுத்தன்மைகளைக் கொண்ட பொருளாக இருக்கின்றது. மேலும் மருத்துவ ரீதியில், அதன் பயன்பாடு என்பது ஆரோக்கியத்திற்கு நாசம் விளைவிக்கக் கூடியதாகும். இதே நிலைதான் பன்றி இறைச்சிக்கும் உள்ளது. அதனை பயன்படுத்துவதாலும் பல வகையான நோய்கள் ஏற்பட்டு விடுகின்றன. மேலும், பின்னர் பன்றியிடம் சில ஒழுக்க குறைபாடுகளும் காணப்படுகின்றன. அவை அதன் இறைச்சியை உண்பவர்களிடம் இடம் பெயர்ந்து விடுகின்றன. மேலும் எந்தப் பிராணிகள் அல்லாஹ் அல்லாதவற்றின் பெயரால் அறுக்கப்பட்டிருக்குமோ அதன் பயன்பாடு மனிதனை தன்மானமற்றவனாக ஆக்கிவிடுகின்றது. மேலும் அவனது உள்ளத்திலிருந்து அல்லாஹ்வின் மீதான கண்ணியம் அகன்றுவிடுகின்றது. இதேபோன்று, இஸ்லாம் பருகும் பானங்களில் மதுவை ஹராமாக்கியுள்ளது. ஏனெனில், அது மனித அறிவின் மீது திரையிட்டுவிடுகின்றது. மேலும் அவனது புத்திக்கூர்மை மற்றும் அறிவிற்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றது.

சுருக்கமாக, அல்லாஹ் ஏராளமான பொருள்களை ஹராமாக்கியுள்ளான். அந்தப் பொருள்கள் நம்பிக்கையாளர்களுடைய உடல் ஆரோக்கியத்திற்கோ அல்லது ஒழுக்கத்திற்கோ அல்லது ஆன்மிகத்திற்கோ தீங்கு விளைவிக்கக் கூடியவை ஆகும் என்ற காரணத்தாலேயே அவற்றை ஹராமாக்கியுள்ளான்.

மேலும் எந்தப் பொருள்கள் மனிதனின் பௌதீக நல்லொழுக்க மற்றும் ஆத்மிக முன்னேற்றத்திற்கு காரணியாக இருக்குமோ அவற்றையே ஆகுமானவையாக ஆக்கியுள்ளான். அடுத்து, ஹலாலான பொருள்களிலும் தய்யப் எனும் தூய பொருள்களை பயன்படுத்தும்படி வலியுறுத்தப்பட்டுள்ளது. அதாவது, மனிதனின் ஆரோக்கியம், மற்றும் அவனது இயல்பிற்கு உகந்ததாக இருக்கக் கூடிய பொருள்களையும், மேலும் எவற்றின் பயன்பாட்டால் அவனுக்கு எந்தவொரு தீங்கும் ஏற்படும் என்ற அச்சம் இருக்காதோ அத்தகைய பொருள்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இஸ்லாம் ஒழுக்கத்தின் மீது உணவு ஏற்படுத்தும் தாக்கத்தை ஒப்புக் கொண்டுள்ளது என்பது வெளிப்படையாகும். மேலும், அதனை குறிப்பான நிபந்தனைகளுடன் தொடர்புபடுத்தி நல்லொழுக்கத்தை பெறுவதற்கான ஒரு புதிய வாசலை இஸ்லாம் திறந்துள்ளது.

(தஃப்ஸீரே கபீர், தொகுதி 6, பக்கம் 180, காதியான் பதிப்பு 2010-ம் ஆண்டு)

** * * * * *  *

**National Watch Company**
**Sales & Service**



**B. Mohamed Adil**
93632 06679
99433 38000

**196, Trichy Road, Sulur - 641 402.**
**Somanur, Anuparpalayam, Karumathampatti.**

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

**5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,**
**{ opp. Karuna Clinic } Tirunelveli-627005**

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad